உ

கணபதி துணை

# சைவ சமயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள் – 1

## (சைவசமய பாலபாடம்)




வெளியீடு :

**சைவ சமயாசார சம்ரக்ஷண அபிவிருத்தி சபா**

தலைமையகம் : திருவிடைமருதூர்,

செயலகம் : திருச்சிராப்பள்ளி

விலை : ரூ. **40/-**

## நூல் விபரங்கள்

நூல் பெயர் : சைவ சமயத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்-I
நூலின் வகை : சைவ சமயம்
முதல் பதிப்பு : விகாரி வருடம் சித்திரை 1-ம் நாள் (14-4-2019)
நூலின் அளவு : 1/8 டெம்மி பக்கங்கள் : 64
தாள் : 13.6 எழுத்து : 11 புள்ளிகள்
தொகுப்பு : ஸ்ரீ கணநாதநாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி
பதிப்பு : இரண்யவன்மன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி
கிடைக்குமிடம் : ஜெ. சுமதி ஜயக்குமார், 'அமுத இல்லம்'
39/22, கிருஷ்ணாபுரம் முதல் தெரு,
திருச்சிராப்பள்ளி-620 008.
செல்லிடப்பேசி : 99528 06121, 89037 06120
அச்சிட்டோர் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்
சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-2.
செல்லிடப்பேசி : 0431-2700417.

## நன்றி!

''ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம்'' *திருச்சிராப்பள்ளி*.

அன்புடையீர், வணக்கம்.

எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரரின் திருவருளாலும் குருவருளாலும் இந்த நூலினைப் பெறும் அன்பர்கள் அவசியம் படித்துணர வேண்டுகிறோம்.

இந்நூலில் உள்ள செய்திகள் தருமைஆதீனம் வெளியீடு எண்:24 இந்துமத பாலபாடம் (ஆசிரியர் : நாகர்கோவில் கே.ஆறுமுகநாவலர்) நூலிலிருந்தும், அறுபத்துமூவர் நூலிலி ருந்தும், யாழ்ப்பாணம் - ''சைவப்பெரியார்'' சு.சிவபாதசுந்தரம்,பி.ஏ., அவர்களின் சைவ சமய சாரம் நூலிலிருந்தும் எடுத்தாளப்பட்டது. நூலாசிரியர்களுக்கும் வெளியிட்டவர்களுக்கும், இந்நூலிற்கு நூன்முகம் வழங்கிய பேரூர் கல்லூரி மேனாள் முதல்வர் சிவஸ்ரீ கோ.ந.முத்துக்குமார சுவாமி ஐயா அவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | **சைவ சமயத்தின் மேன்மை** | 05 |
| | **சைவசமயப் பாலபாடம்** | 08 |
| 01. | கடவுள் | 08 |
| 02. | சைவசமயம் | 10 |
| 03. | கடவுள் திருவுருவம் | 12 |
| 04. | சக்தி | 14 |
| 05. | கடவுளையடையும் வழிகள் | 16 |
| 06. | ஆலயம் | 18 |
| 07. | திருவுருவம் | 20 |
| 08. | சிவலிங்கம் | 23 |
| 09. | விநாயகர் | 26 |
| 10. | நடராஜர் | 28 |
| 11. | மகேசன் | 30 |
| 12. | முருகன் | 31 |
| 13. | ஆன்மாக்கள் | 37 |
| 14. | சைவ சமயச் சின்னங்கள் | 38 |
| 15. | ஒழுக்கமுடைமை | 40 |
| 16. | ஆலய பூஜை விளக்கம் | 41 |
| 17. | திருவிழாத் தத்துவங்கள் | 45 |
| 18. | ஆலய வழிபாடு செய்யும் முறை | 49 |
| 19. | அறுபத்துமூவர் - (சிறுகுறிப்பு) | 52 |
| 20. | பூப்பிள்ளை அட்டவணை | 58 |

உ

திருச்சிற்றம்பலம்

'கவியரசு' கு. நடேசக்கவுண்டரின் திருமகனார்
'சிவக்குடில் அன்பர்' முனைவர். **கோ.ந.முத்துகுமாரசுவாமி,**M.A.,B.L.,P.hD.,
நடேசர் நிலையம், S-32, கோவைப் புதூர், கோயம்புத்தூர், 641 042.

# நூன்முகம்

''கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்''

"பாரத நாடு பழம்பெரு நாடு,
நீரதன் புதல்வர், இந்நினை வகற்றாதீர்''

*என மகாகவி பாரதநாட்டு மக்களை அறைகூவி அறிவுறுத்தினார். இந்த அறிவுறுத்தல் சைவக் குடியில் பிறந்தோருக்கும் ஏற்புடைய தாகும்.*

***மக்கள் வாழ்கின்ற இவ்வுலகத்துள், வேதாகம ஒழுக்கம் வழங்கா நாட்டில் பிறவாமல், அவ்வேதாகம வழக்கு வழங்கும் புண்ணிய பூமியில் பிறத்தல் புண்ணியத்தால் ஆகும். அதிலும் சிவநெறிச் சார்புடைய தவஞ்செய் சாதியில் பிறத்தல் மிக்க புண்ணியத்தான் ஆகும். சைவக் குடியிற் பிறந்தோர் தம் குடிப்பெருமையையும் தாம் வணங்கும் சிவப்பரம்பொருளின் பரமாய மேன்மையையும், தாம் கைக்கொண்டு ஒழுகும் சிவநெறி யின் உண்மைகளையும் அறிதல் இன்றியமையாக் கடமையாகும்.***

*தற்காலத்தில் சிவநெறியை அறிந்து கொள்ளும் ஆர்வம் பெருகினாலும், புறவுலக பாதிப்பினால் சைவசித்தாந்த சாத்திரங்களை முழுமையாகப் பயில்வதற்கும் திருமுறைகளை ஓதி உணர்வதற்கும் அவகாசம் குறைவு அதனால் சிவஞானப் பெரியோர், மக்கள் அனைவரும் சிவநெறியை அறியும் வகையில் எளிய நூல்களைப் படைத்தளித்துள்ளனர். அவ்வகையில்* **''சைவ சமயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்''** *எனும் இந்நூல் அரிய சிவநெறியை அனைவரும் எளிதில் அறியுமாறு வினாவிடையில் அமைந்துள்ளது.*

***சைவப் பெரியார், சிவசீலர், யாழ்ப்பாணம், புலோலிநகர் திரு. ச.சிவபாதசுந்தரனாரின் சைவத்தின் மேன்மையை உணர்த்தும் கட்டுரை இந்நூலுக்கு முகம்போல அமைந் துள்ளது. முகவிலாசம் காண்போரை ஈர்க்க வல்லது அதுபோலச் சைவத்தின் மேன்மையை உணர்த்தும் இக்கட்டுரை, சைவத்தின் உண்மைகளை அறிந்துகொள்ள ஆவலைத் தூண்டி எழுப்பும் என்பது உறுதி.*** *ஸ்ரீகணநாத நாயனார் நூலகம் சிவநெறித் தொடர்பான இன்று வழக்கில் கிடைப்பதற்கு அரிதான நூல்களையும் சிவஞானச் செல்வர்களின் கட்டுரைகளையும் தேடிப்பிடித்து வெளியிட்டுச் சைவப் பணி ஆற்றி வருகின்றது. பயன் கொள்ளுவது சைவ உலகின் கடமை.*

# சைவ சமயத்தின் மேன்மை

**ஆசிரியர் : யாழ்ப்பாணம், புலோலிநகர், சு.சிவபாதசுந்தரம், பி.ஏ.,**

எல்லா ஆன்மாக்களும் மோட்சத்தைப் பெறுமென்று சொல்லுவது சைவ சமயம் மாத்திரமேயாம்.

உமாபதி சிவம் உயிர்களை வகுக்கும் போது (1) இதுவரையில் மோட்சத்தைப் பெற்றவர்கள். (2) இனிமேல் மோட்சத்தைப் பெறுவோர்கள் என இரண்டாகப் பிரிக்கின்றார். ''துறந்தோர் துறப்போர்'' என்பது அவருடைய திருவாக்கு. மற்றைய சமயத்தவர்கள் தங்கள் தங்கள் சமயத்தவர்களே ஈடேறுவார்கள் என்றும், வேறு சமயத்தவர்கள் நித்திய நரகத்தை அடைவார்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

2. ஒரு பள்ளிக்கூடத்தை ஆக்குபவர் மாணாக்கர்களது அறிவுக்குத் தக்கதாக ஒன்றுக்கொன்று மேற்பட்ட பல வகுப்புகளை வைப்பது போல, கடவுள் ஆன்மாக்களது நிலைக்குத் தக்கதாக ஒன்றுக்கொன்று மேற்பட்ட பல சமயங்களை ஆக்கினார் என்று சொல்லுவது சைவ சமயம் மாத்திரமேயாம். ''அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவி'' என்றார் கச்சியப்பசிவம். 'அறுவகை நெறி' என்பது அறுவகைச் சமயம்; இவை நான்கு வகைப்படும்.

கீழ் வகுப்பாகிய அறுவகைச் சமயங்கள் சமண சமயம் முதலியவை. இவற்றுட் பல கடவுள் உண்டென்று சொல்லுவ தில்லை. மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் ஏகான்மவாதம் முதலியவை. இவற்றுட் பல ஆன்மாவின் வேறாகக் கடவுள் இல்லை என்று கூறும். இவற்றுக்கு மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் சாக்தம் முதலியவை. இவைகள் கூறும் கடவுளின் இலக்கணம் நிறைவானதன்று. இவற்றுக்கு மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் சிவசமவாதம் முதலியவை. இவற்றுக்கும் சைவத்திற்கும் வேறுபாடு அற்பமானது. இவற்றுக்கு எல்லாம் மேற்பட்டது சைவசமயமாம்.

3. மற்றைய சமயத்தவர்கள் தங்கள் தங்கள் சமயமே கடவுளால் ஆக்கப்பட்டதென்றும் ஏனைய சமயங்கள் கெட்ட சமயங்கள் என்றும் சொல்லுவார்கள். எந்தச் சமயத்தவரும் தமது சமயக்கடவுளை வழிபடும்போது அவ்வழிப்பாட்டைக் கடவுள் ஏற்று அருள் செய்வாரென்று சொல்லுவது சைவசமயம் மாத்திரமே. **''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாக னார்தாம் வருவர்.''** -என்றார் அருணந்திசிவம்

4. மோட்சம் அடைதற்குச் சாதனமாகச் சமய அனுட்டானத்தைப் படிப்படியாக நிரைப்படுத்தியுள்ளது சைவசமயம் மாத்திரமேயாம்.

சர்வகலாசாலைகளிலே இளம்பட்ட வகுப்புகள் (Graduate Course) முதுப்பட்ட வகுப்புகள் (Postgraduate Course) என இரண்டு பெரிய படிகள் இருப்பதுபோலச் சைவ சமயத்திலே உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இரண்டு பெரும்படிகள் உண்டு. உபாய மார்க்கமாவது–உலகப்பற்றோடு செய்யும் சைவ அனுட்டானங்கள். நம்மைப் போன்றவர்கள் சைவசமய அனுட்டானங்களைச் செய்வாராயின் அவர்கள் உபாய மார்க்கத்தவராவர்.

உண்மை மார்க்கமாவது – உலகப்பற்றுச் சிறிதுமின்றிச் செய்யப்படும் சைவ அனுட்டானங்கள். தாயுமானவர் முதலியோர் உண்மை மார்க்கத்தவர். இளம்பட்ட வகுப்புகள் முதலாண்டு வகுப்பு முதல் நான்காமாண்டு வகுப்பு வரையும் நாலுபடிகளாதல் போல, உபாய மார்க்கமானது உபாயச் சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானமென நான்கு படிகளை யுடையது. முதுப்பட்டப் படிப்பிலே பல படிகள் இருத்தல் போல (M.Sc., Ph.D., D.Sc.) உண்மை மார்க்கத்திலே உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம் என மூன்று படிகள் உள. முதுப்பட்டப் படிப்பில் உந்நத நிலையடைந்தோர் இராசசபை அங்கத்தவராதல் போல (F.R.S) உண்மை மார்க்கத்தில் உந்நத நிலையடைந்தோர் உண்மை ஞானமாகிய உந்நதப் படியை அடைவர். இவற்றுள் **சரியையாவது:–** சிவாலயத் தொண்டு செய்தலும், விநாயகர் முதலிய உருவத் திருமேனிகளுள் ஒன்றுக்குப் பூஜை செய்தலுமாம். **கிரியையாவது:–** சிவலிங்க பூஜை செய்தல். **யோகமாவது:–** சிவத்தியானம். **ஞானமாவது :–** ஞானநூல்களை ஞானாசாரியரிடம் கேட்டு அறிந்து சிவஞானத்தைப் பெறுதல்.

**.......''சங்கரனை யடையும்**
**நன் மார்க்கம்நாலு அவைதாம் ஞானயோகநற்**
**கிரியா சரியைஎன நவிற்றுவதுஞ் செய்வர்.''** -என்றார் அருணந்திசிவம்

மற்றைய சமயங்கள் இவ்வாறான படிகளொன்றுமின்றி எளிதிலே மோட்சத்தைக் தருவோம் என்கின்றன. அப்படியாயின் அவர்களுடைய மோட்சம் என்ன பெறும்?

**5. எல்லா விதமான தீவினைகளையும் விலக்குவது சைவ சமயம் மாத்திரமேயாம்.** *(ஏனைய தீவினைகளோடு கள்ளுண்ணல், புலாலுண்ணல், கொலையாகிய மூன்றையும் விலக்குவது சைவ சமயமே. புலாலுண்ணலை புத்தசமயம் விலக்கவில்லை; புலாலுண்ணலையேனும் கொலையையேனும் இஸ்லாம் சமயம் விலக்க வில்லை; புலாலுண்ணலையேனும், கள்ளுண்ணலையேனும், கொலையையேனும் கிறிஸ்து சமயம் விலக்கவில்லை).

*6. ஆன்மாக்கள் ஆணவமென்னும் வியாதியினாற் பீடிக்கப்பட்ட நோயாளிகள் என்றும், அவைகள் செய்யும் பிழைகள் யாவும் அந்த நோயினால் வருவன என்றும் அவைகள் இயல்பாக நல்லவை என்றும், கடவுள் அந்த நோயைத் தீர்க்கும் வைத்தியநாதர் என்றும், அவர் ஆன்மாக்களுக்கு ஊட்டும் இன்ப துன்பங்கள் அந்நோயைத் தீர்க்கும் மருந்துகள் என்றும் சொல்லுவது* **சைவசமயம் ஒன்றேயாம்.**

''அருளினால் உரைத்த நூலின் வழிவரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவம் தீர்ப்பன்
பொருளுலாம் சுவர்க்க மாதி போகத்தாற் புணியம் தீர்ப்பன்
மருளுலாம் மலங்கள் தீர்க்கும் மருந்திவை வைத்திய நாதன்.''

*- என்றார் அருணந்திசிவம்*

*மற்றைய சமயங்கள் மனிதர்கள் இயல்பாகக் கெட்டவர்கள் என்றும், கடவுள் அவர்கள் செய்யும் குற்றத்துக்காக அவர்களைத் தண்டிக்கும் நீதிபதி என்றும் கூறும்.*

**7. புறச்சமயத்தவரை வலிந்து இழுக்காதது சைவ சமயம் மாத்திரமேயாம்.** **மற்றைய சமயத்தவர்கள் ஏனைய சமயத்தவர் களைத் தங்கள் சமயத்துக்கு இழுப்பதே தமது பெரிய முயற்சியாகக் கொள்வார்கள்.*

''மனிதர் காள்இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.''

*– திருநாவுக்கரசர், தேவாரம் – பதிகம் 205*

மழை வழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக அஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. *- உமாபதிசிவம்*

உ

# சைவசமய பாலபாடம்

## 1. கடவுள்

1. **கடவுள் என்ற சொல்லின் பொருள் யாது?**

*கடவுள் என்ற சொல் கட என்னும் பகுதியும், உள் என்னும் வினைமுதல் விகுதியும் பெற்றுக் கடந்தது எனப் பொருள்படும். படவே, கடவுள் என்பவர் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் என்பதாயிற்று.*

2. **கடவுள் ஒருவர் உண்டா? அவர் உண்டென்று நம்புவது எப்படி?**

*ஒரு பொருள் உண்டென்று நம்புவதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என மூன்று அளவைகள் உள்ளன. பிரத்தியட்சப் பிரமாணம் நேரில் காண்பது. அனுமானப் பிரமாணம் தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றைக் கொண்டு ஆய்ந்து அறிவது; ஆகமப்பிரமாணம் உயர்ந்த நூல்களால் அறிவது. நூலறிவு சுவானுபவ அறிவாகாது. ஆதலால் அதனை வேறு அளவைகளினாலும் விளங்க வைக்க வேண்டும். நேரிற் காணுமறிவு சிறந்ததேயெனினும், அது கடவுள் சம்பந்தமாகப் பயன்படாது; ஆதலால், அனுமானப் பிரமாணமே நமது ஐயத்தை நீக்கத்தக்க அளவையாகின்றது. மலைமீது தீ எரிந்து கொண்டிருக்கிறது. நேரில் அது காணப்படவில்லை. ஆயின் தீயிலிருந்து கிளம்பும் புகையைக் கண்ட எவனும் மலையில் தீ உண்டென்று உறுதியாக நம்புவான். அதுபோலக் கடவுளையும் நேரிற் காண்பது எளிதன்று; மிகவருந்தி உழைத்தால் காணலாம். உழைத்தற்கு முன், படைப்புப் பொருள்களைக் கண்டு அவற்றை உண்டாக்க ஒரு தலைவன் உளனெனக் கருதி உணர்தல் வேண்டும்.*

3. **அவற்றை உண்டாக்க ஒரு தலைவன் வேண்டுமோ? இயற்கையாய் உள்ளன என்று ஏன் கூறுதல் கூடாது?**

*இயற்கை, காரண காரியங்களோடு இயைந்தது. கடவுள் காரண காரியங்களுக்கு மேற்பட்டவர். மரத்தினின்று வித்தும் வித்தினின்று மரமும் உண்டாவது இயற்கை. இவற்றுள் முதலில் உண்டானது வித்தா? மரமா? வித்தினையோ, மரத்தையோ ஆதியில் உண்டுபண்ண ஆதிமூலப் பொருளொன்று இருந்துதானே தீரவேண்டும்? படைப்புப் பொருள்கள் அனைத்தும் தோன்றுவதற்குக் காரணமாக நின்று, அவை இயற்கையாய் நடப்பன போல் காட்டுவதே ஆண்டவனது அருட்செயலாகும்.*

4. **கண்ணால் காணமுடியாத கடவுளை உண்டு என்று நம்புவது எப்படி?**

*பாலினுள் நெய்யிருப்பது, பாலைப் பார்த்தபோது காண முடிகிறதா? இல்லையே! அதனால் பாலில் நெய்யில்லை என்று கூறுவோர் யாரேனும் உண்டோ? ஒருவரும் இல்லை. நமது கண்ணுக்குக் காணமுடியாததும், பாலில் எங்கும் வியாபித்திருப்பது மாகிய நெய்யைக்காண, பாலைக்காய்ச்சித் தயிராக்கி, தயிரில் மத்தினை ஊன்றி முறுகக் கடைதல் வேண்டும்; கடைந்தால் அதிலிருந்து வெண்ணையும் பின் நெய்யும் பெறலாம். அதுபோல, கடவுள் இவ்வுலகத்தில் காணமுடியாதபடி மறைந்திருக்கின்றார். அவரைக் காண்பதற்கு, பேரன்பாகிய மத்தினை ஊன்றி, அறிவாகிய கயிற்றினால் முறுகக் கடைந்தால் அவரைக்காண முடியும். இக்கருத்தை அப்பர் சுவாமிகள்,*

> ''விறகில் தீயின்நன் பாலிற்படுநெய்போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவு கோல் நட்(டு) உணர்வு கயிற்றினால்
> முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே''.

*எனும் தேவாரத்தால் நன்கு விளக்கியுள்ளார்கள்.*

*வாயுவை நமக்குக் கண்ணால் காணமுடிகிறதா? மின்சாரத்தைக் கண்ணால் காண முடிகிறதா? நமது கண்ணுக்குக் காணமுடியாததால் அவையில்லை யென்று சொல்ல முடியுமா? அவை செய்யும் வேலைகளைக்கொண்டு அவை உண்டென்று எப்படி நம்புகிறோமோ, அப்படியே கடவுளின் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்களைக்கண்டு அவன் உண்டு என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும்.*

5. **கடவுள் என்று ஒருவர் வேண்டுமானால் இருக்கட்டும்; அவரைப் பற்றி நமக்குக் கவலை ஏன்?**

*குளிரால் நடுங்கும் மனிதர்களுக்குக் குளிரை மாற்றுவதற்காக எரிந்துகொண்டிருக்கும் தீச்சுடர் போலவும், பாலைவனங்களைக் கடந்து செல்பவருக்குத் தங்கி இளைப்பாற உதவும் 'ஓயஸிஸ்'* (Oasis) *என்று சொல்லப்படும் நிழல், தண்ணீர், உணவுப் பொருள் முதலியவற்றையுடைய இடம் போலவும் இனிய பழங்களையும் குளிர்ச்சியினையும்கொண்டு, வந்தடைந்தாருக்குக் கொடுக்கக் காத்து நிற்கும் மரம் போலவும் கடவுள் இருக்கிறார். தீவினை, பிறவிநோய் முதலியவற்றால் துன்புறும் உயிர்களின் துன்பத்தை நீக்க அவர் காத்திருக்கின்றார். வேண்டியவர்கள் அவரை அடைந்து அதனை மாற்றிக் கொள்ளலாம். அவரையன்றி அதனை அகற்ற வேறு எவராலும் ஆகாது. தீக்காய்பவனுக்கு உதவும் தீயினுக்கு, ஒருவன்*

*தன்னை அடைவதால் நலமேனும் நட்டமேனும் இல்லாததுபோல, நாம் இறைவனை அடைவதால் அவருக்கு நலமேனும் நட்டமேனும் இல்லை. ஆனால் நமக்கோ தீக்காயும் மனிதனையொப்ப நலமும், தீயிருந்தும் காயாத மனிதனையொப்ப நட்டமும் உண்டு. ஆதலால் கடவுளை நம்பி அவரை அடைய முயன்று, பிறவி நோயெனும் பெருநோயை அகற்றிக்கொள்ள வேண்டுவது ஆறறிவுடைய மனிதனின் அறிவுடைய செயலாகும்.*

**6. உயர்பதமடைய நல்லொழுக்க வாழ்க்கை உறுதுணையாய் இருக்க, கடவுட்கொள்கையின் அவசியம் என்ன?**

*ஒருவன் நல்லொழுக்கமுடையவனாய் இருப்பதற்கு உள்ள காரணம் என்ன? எதைக் கருதி? இரவு நடுச்சாம வேளையில், தன் வீட்டில் வேறு துணையின்றி தங்கி இருக்கும் ஒருவனை கொலை செய்து இலட்சக்கணக்காய் அவன் கையில் இருக்கும் பொருளைத் திருடிக்கொண்டால் என்ன குற்றம்? தன் பழிச்செயலை வேறு எவரும் அறியவில்லை; அவமானமுமில்லை, தன் குடும்பத்தாரும் அதனால் மிகுந்த இன்பம் அனுபவிக்கலாம். இவ்வளவு இருந்தும், தான் செய்யும் குற்றத்தை எவரும் அறியாது போனாலும், எல்லாவற்றையும் உணரும் இறைவன் அதனை அறிந்து தக்க தண்டனை விதிப்பான் என்பது கருதியன்றோ ஒருவன் அதைச் செய்யா தொழிகின்றான்? எனவே, கடவுள் நம்பிக்கை இருந்தால் மாத்திரமே மக்களிடம் நல்லொழுக்கம் மிகும் என்பது விளங்குகின்றது. கடவுள் நம்பிக்கையின்றேல் எத்தகைய தீய செயலையும் செய்யும் திடம் மிகுந்து தீமை பல விளையும். ஆதலால், நல்லொழுக்கம் வளர் வதற்கும் கடவுள் நம்பிக்கை இன்றியமையாததாகும்.*

**7. கடவுளின் இயல்பு யாது?**

*அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைவன் நிறைந்து நிற்கின்றான். அவன் தூய உடம்பினன்; இயற்கை அறிவினன்; எல்லாம் அறிபவன்; அஞ்ஞானத்தைத் தருவனவாகிய மலங்கள் இயல்பாகவே இல்லாதவன்; சுதந்திரன்; ஆனந்த சக்தியுடையவன்; பரிபூரணன்; பேரருள் உடையவன்.*

## 2. சைவ சமயம்

*(அ) ''முக்தியடைவதற்கு ஏற்ற மதம் எங்கள் மதமே'' என யானை கண்ட குருடர் போல் தாம் கண்டதே முடிவு எனக் கூக்குரலிடாது, எப்பெயரைக் கொண்டு எங்கு நின்று வழிபடினும் அவையனைத்தையும் இறைவன் ஏற்றுக் கொள்கிறான் என்ற சமரசக் கருத்தினை வெளியிடுகிறது சைவசமயம்.*

''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்.'' - *சிவஞான சித்தியார்*

*(ஆ) பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் கொண்டது.*

*(இ) ஆண் பெண் தன்மையை இறைவனிடம் காட்டிப் பெண்மையை இகழாது உயர்த்திக் கூறுவது.*

*(ஈ) ஆண்டான் - அடிமை அல்லது தாஸமார்க்கம். தந்தை - மகன் அல்லது சத்புத்திரமார்க்கம். தோழன் - தோழன் அல்லது சகமார்க்கம், ஆசாரியன் - மாணவன் அல்லது சன்மார்க்கம் என்ற முறைகளில் கடவுள் வணக்கத்தை இயல்புக்கும் தகுதிக்கும் ஏற்ப உலகுக்கு வகுத்துக்காட்டுவது.*

*(உ) உயிரின் குற்றங்களை ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலமாக வைத்து விளக்குவது.*

*(ஊ) இருபத்து நான்கு தத்துவங்களோடு பிறமதங்கள் நிற்ப, இது முப்பத்தாறு தத்துவங்களைக்கொண்டு விளங்குவது.*

*(எ) அறிவு வடிவத்தோடு, அருவ உருவ அருவுருவத் திருவுருவங்களாக இறைவனைக் கண்டு வழிபடச்செய்வது.*

*(ஏ) எல்லா மதங்களையும் அவற்றின் முடிபுகளையும் தன்னுள் அடக்கிக்காட்டி ஒரு மதத்தையும் இகழாமல் அவற்றிற்கு மேலும் திகழ்ந்து விளங்குவது.*

*(ஐ) திருக்கோயில் வழிபாடு, நித்திய கர்மம் முதலியவற்றால் உடலையும் மனத்தினையும் தூய்மையாக்கி மனோவாக்குக் காயத்தினையெல்லாம் கடவுள் வணக்கத்தில் ஈடுபடுத்தி மக்களை மாயையினின்றும் அகலச்செய்வது.*

*(ஒ) முத்தி நிலையை உலகியல் இல்லொழுக்க இன்பத்தோடு இணைத்து மேற்செல்ல வழிகாட்டுவது.*

*(ஓ) இல்லறத்தாலும் துறவறத்தாலும் இறைவனை அடையலாம் என்று கூறுவது.*

*(ஔ) மனிதர்களைச் சுருங்கிய கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்துடன் இறைவனை வழிபடச் செய்வது.*

*(க) நாஸ்திகன் முதல் திவ்ய ஞானிவரை தன்னில் இருப்பதற்கு இடம் கொடுப்பது.*

*(கா) பெரியோர் பிறப்பு அல்லது திரு அவதாரங்கள் என்றென் றைக்கும் உண்டு எனக்கூறுவது.*

''ஓதுசமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள் நூல் யாதுஇங்கு என்னில்
இதுவாகும் அது அல்லது எனும்பிணக்கது இன்றி

நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருள் நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறையா கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்''.

*- சிவஞான சித்தியார்.*

# 3. கடவுள் திருவுருவம்

1. **உருவம் இல்லாத கடவுளை சைவசமயத்தினர் ஏன் உருவத்தில் வணங்குகிறார்கள்?**

*கடவுள் அருவன் என்பதை சைவ சமயத்தினர் ஒத்துக் கொள்ளு கிறார்கள். ஆனால் கடவுள் அருவமாக மட்டிலும் தான் இருப்பார் என்று சொல்பவர்களிடம் ''கடவுளுக்கு உருவத்தோடு வரமுடியுமா?'' எனக் கேட்டால் என்ன விடை கூறுவார்கள்? 'முடியும்' என்பாரானால் உருவமாக வணங்குவதும் சரியென்றாயிற்று; 'முடியாது' என்பாரானால் எல்லா வல்லமையும் உடைய கடவுளுக்கு உருவத்தோடு மட்டிலும் வர முடியாது என்பது எத்துணை அறிவீனம்? எல்லா வல்லமையும் உடைய இறைவன் எவ்வகை உருவத்தோடு அருள்புரிவதற்கு ஆற்றல் உடையவனாயிருக்க முடியாது எனக்கூற நமக்கு என்ன உரிமை யுள்ளது? ஆகவே சர்வசக்தன் எவ்வித உருவமாகவும் அருள்புரிவான் என்பது விளங்குகிறது அல்லவா?*

2. **கடவுள் திருவுருவங்கள் எவை?**

*அருவம், உருவருவம், உருவம் என்னும் மூன்றுமாம். அறிஞர்க்கு அறிவாம் உருவும் அவன் உடையன்.*

3. **அவர் அருவமாயிருக்கும்போது எப்பெயர் பெறுவர்?**

*சிவம், சக்தி, நாதம், விந்து என நான்குவிதப் பெயர் பெறுவர்.*

4. **அவர் உருவருவாயிருக்கும்போது எப்பெயர் பெறுவர்?**

*சதாசிவம் எனப்பெயர் பெறுவர்.*

5. **அவர் உருவாயிருக்கும்போது எப்பெயர் பெறுவர்?**

*மகேசன், உருத்திரன், மால், அயன் என நான்கு விதப்பெயர் பெறுவர்.*

இது *அடியிற் கூறும்* பாட்டாலும், படத்தாலும் நன்கு விளங்கும்.

''சிவம், சக்தி, நாதம், விந்து; சதாசிவன்; திகழுமீசன்,
உவந்தருள் உருத்திரன்தான், மால், அயன்; ஒன்றின் ஒன்றாய்ப்
பாவந்தரும் அருவம் நாலிங்கு, உருவம் நாலுபயம் ஒன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்'' *– சிவஞானசித்தியார்*

**கடவுள்**

| அருவம் | உருவருவம் | உருவம் |
|---|---|---|
| 1. சிவம் | 5. சதாசிவம் | 6. மகேசன் |
| 2. சத்தி | | 7. உருத்திரன் |
| 3, நாதம் | | 8. மால் |
| 4. விந்து | | 9. அயன் |

### 6. சைவ சமயத்தினர்க்கு மும்மூர்த்திகளாகிய மூன்று கடவுள் உண்டா?

*ஒருவர் ஓரிடத்தில் தாசில்தார், மாஜிஸ்ட்ரேட், முன்சீப் ஆகிய மூன்று வேலைகளையும் பார்த்து வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ரெவின்யூ காரியம் பார்க்கும்போது தாசில்தார் எனவும், கிரிமினல் நடவடிக்கை நடத்தும்போது மாஜிஸ்ரேட் எனவும், சிவில் நடவடிக்கை நடத்தும்போது முன்சீப் எனவும் பெயர் பெறுகிறார். முத்தொழிலுக்கும் முப்பெயர் பெறுபவர் ஒருவரே. அதுபோல ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை நடத்தும்போது ஏக நாயகனே முப்பெயர் பெறுகிறான். திருஞான சம்பந்தப்பெருமான் இதனை,*

''ஓருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல்பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை'' எனவும்,

*அப்பர் பெருந்தகை,*

''ஒருருவே மூவுருவும் ஆன நாளோ'' எனவும்,

*சேரமான் பெருமாள் நாயனார்,*

''அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்;
அரனாய் அழிப்பவனுந் தானே''

*எனவும், பல பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே எல்லாம் வல்ல கடவுள் ஒருவரே என்பதும் அவரே பல தொழில்கள் செய்யும்போது பல உருவங்களையும் பெயர்களையும் அடைகிறார் என்பதும் பெறப்படும்.*

### 7. அருவமாகிய இறைவன் உருவங்கொண்டது ஏன்?

*உருவத்தையுடைய நமக்கு உருவமுடைய ஒரு பொருளை எளிதில் கண்டுகளிக்க முடியுமே தவிர உருவம் அற்றதைக் காணமுடியாதாகையால் நமக்கிரங்கி அவன் திருவுருவத்தைக்*

கொண்டான். அருவமாகிய கடவுளை நாம் உருவத்தோடு கலந்துறையும் காலம்வரை, உருவமாகக் கண்டுகளிக்க முடியுமே தவிர அருவமாகக் கண்டு அடைய முடியாது. நாம் அருவ நிலையை யடையும் காலம் வந்தால் இறைவனையும் அருவமாக வணங்கலாம். அதுவரை நமக்கு அவரை உருவமுடையவராகவே வணங்கமுடியும்; அருவமாக வணங்க முடியாது.

பனிக்கட்டியையும் தண்ணீரையும் ஒன்று சேர்க்க வேண்டுமானால் பனிக்கட்டி தண்ணீராக வேண்டும்; அல்லது தண்ணீர் பனிக்கட்டியாக வேண்டும். அதுபோல அருவமாகிய தெய்வத்தை நாம் அடைய வேண்டுமானால் அவர் உருவமாக வேண்டும் அல்லது நாம் அருவமாக வேண்டும். நாம் அருவமாவது எளிதன்று; ஆகையால் இறைவன் நமக்கிரங்கி உருவமாகி அருள்கின்றான். இதனை,

**'' – இல்லா**
**அருவாகி நின்றானை ஆரறிவார் தானே**
**உருவாகி தோன்றானேல் உற்று''** – *சிவஞானபோதம்*

எனும் சாத்திரப்பகுதியால் உணரலாம்.

7. **இவ் மூவகை உருவங்களையும் சைவசமயத்தினர் வழிபடுவது எங்ஙனம்?**

உருவத்திருமேனியை அவ்வவ்வுருவங்களாகவும், அருவுருவச் சதாசிவத்தைச் சிவலிங்கமாகவும், அருவத் திருமேனியைச் சிதம்பர ரகசியம், சித்சபை, வெளி முதலியனவாகவும் வைத்து வழிபடு கின்றனர். இதனால் சைவசமயம் மனிதர்களைச் சுருங்கிய விலங்கிட்டுக் கட்டுப்படுத்தாது என்பதும், அவரவர் தகுதிக்கேற்பச் சுதந்திரத்துடன் வழிபட்டுய்யும் வழிகளையுடையது என்பதும் விளங்குகின்றன.

## 4. சக்தி

1. **கடவுளுக்கு மனைவி இருப்பது போல வைத்து வழிபடுவதன் நோக்கமென்ன?**

பரம்பொருள் போதானந்த மெய்ப்பொருள். போதமாகிய அருளொளி சத்தி எனவும் ஆனந்தமயம் சிவம் எனவும் கருதப்படுகின்றன. கடவுளின் அருளாகிய சக்தியினையே அம்மையென வைத்து வழிபடுகின்றோம். அந்தச் சக்தி இல்லையானால் கடவுளுமில்லை. சூரியன் தன் ஒளியைக்கொண்டு இருளை ஓட்டிக் கண்களுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதுபோல, இறைவனும் உயிர்களின் மயக்கத்தை, சக்தியைக் கொண்டு ஒழித்து

உயிர்களுக்கு மெய்யறிவினைத் தருகின்றான். விளக்காவது சுடரே; அதில் சூடும் இருக்கிறது. சுடரிலிருந்து சூட்டினையோ சூட்டிலிருந்து சுடரினையோ பிரிக்க முடியாது; அப்படி அவை ஒன்று சேர்ந்திருக் கின்றன. அதுபோல ஆண்டவனிடமிருந்து சக்தியையோ சக்தியினிட மிருந்து ஆண்டவனையோ பிரிக்கமுடியாது.

''அருளது சக்தியாகும் அரன் தனக்கு; அருளையின்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை''

— *சிவஞானசித்தியார்.*

2. **அருட்சத்தி பெண் வடிவம் பெறுவானேன்?**

உலகவுயிர்கள் அனைத்தும் ஆண் பெண் தன்மையில் இருந்தே உலகபோகம் நுகர்ந்து உலக வளர்ச்சியைச் செய்கின்றன. செடி கொடிகளிடத்தும் ஆண்பெண் தன்மை இருப்பதை அறிகிறோம். ஆண்டவனும் தன் அருளையே பெண் வடிவமாய்க்கொண்டு போகியாய்த் தோன்றி உயிர்கள் அனைத்தையும் போகத்தை அனுபவிக்கச் செய்கின்றான். அவன் அம்மை அப்பனாக இருந்து உலக சிருஷ்டி செய்தததனாலேயே உலகவுயிரனைத்தும் அம்மை அப்பராயிருந்து மக்கட் பேறடைந்து வாழ்கின்றன. அவன் அம்மை அப்பனாயிருந்து உலக சிருஷ்டி செய்யாது போனால் நாமும் அம்மை அப்பராயிருந்து உலகவிருத்தி செய்தல் இயலாது. ஆனால் ஆண்டவன் போகரூபத்தோடு யோகரூபமும் அல்லது வேகரூபமும் அல்லது கோரரூபமும் உடையவன்.

மின்சாரசக்தியை ஆராய்ந்து பார்த்தால் அதனுள் இரண்டு வகையான சக்திகள் இருப்பதைக் காண்கின்றோம்; ஒன்று ''பாஸிடிவ்''; மற்றொன்று ''நெகடிவ்'' ஏன் இவை இரண்டு வகையாயிருக்கின்றன என்பதை எந்த விஞ்ஞான சாஸ்திரியும் சொல்லமுடியாது. இவ்விரண்டும் சேர்ந்தாலல்லது மின்சாரம் உண்டாகாது. ''இருமையினன்றி, இயங்காது உலகம்'' என்பது விஞ்ஞானிகளின் அபிப்பிராயமாகும். இங்ஙனம் எல்லாவற்றிலும் இருமை இருப்பது ஆண் பெண் போன்ற இருமைகளாகும். இங்ஙனம் உலகம் முழுவதும் ஆண்பெண் வடிவமாக இயங்குவதற்காகவே இறைவனும் தன்னருட்சக்தியைப் பெண் வடிவாக்கி உடன்கொண்டு விளங்குகின்றான்.

3. **கோயில்களில் பள்ளியறை வைத்திருப்பதேன்?**

உலகப்படைப்பு சிவத்திலிருந்து சக்தி வெளிப்பாட்டால் உண்டாகிறது. அதன் ஒடுக்கம் சக்தி சிவத்தில் ஒடுங்குவதால் உண்டாவது. இந்நிலைகளைக் காட்டுவதற்காகவே அம்மை வேறு அப்பன் வேறாக வைத்து வணங்கி, இரண்டினையும் பூஜை முடிவில் ஒன்று சேர்த்து வணங்குகின்றார்கள்.

4. **ஆண்டுக்கொருமுறை ஆண்டவனுக்கு நடத்தும் திருக்கலியாண வைபவம் எதற்கு?**

*ஆண்டவன் நித்தியகலியாண ரூபி. நமக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒருநாள், ஆதலால் ஆண்டுக்கு ஒரு திருக்கலியாணம் நடத்துவது தினமும் நடத்துவதாகும். தினமும் நடத்துவதேன் எனின் சிவத்தினிடமிருந்து சக்தி பிரியாது அம்மை அப்பராம் போகவடிவம் கொண்டு அருள் செய்வதினாலேயே நாம் உய்கின்றோம் என்கின்ற உண்மையைக் காட்டுவதற்காகவேயாம்.* **(சிவஸ்ரீ ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்களின் திருக்கல்யாணம்** *என்னும் நூலில் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.)*

5. **பெண் தெய்வங்கள் பல இருக்கக் காரணம் என்ன?**

*அருவத்தில் சிவத்துக்குச் சக்தியும் நாதத்துக்கு விந்துவும் ஆக இருவகையாகவும், உருவத்தில் மகேசனுக்கு மகேசையாகவும் உருத்திரனுக்கு உமையாகவும், மாலுக்குத் திருவாகவும் அயனுக்கு வாணியாகவும், அருவுருவமாகிய சதாசிவத்துக்கு மனோன்மணி யாகவும் எவ்வாறு ஏக நாயகனாகிய இறைவன் நடிக்கின்றானோ அவ்வாறே அவனது சக்தியும் நடிக்கின்றாள். ஏழுவிதமாக நடிக்கின்ற இறைவன் எப்படி ஒருவனோ அதுபோல ஏழுவிதமாக நடிக்கின்ற சக்தியும் ஒருத்தியே ஆகும்.*

**சிவபேதம் ஏழு, சக்திபேதம் ஏழு**

| அருவம் | | அருவுருவம் | உருவம் | | | |
|---|---|---|---|---|---|---|
| சிவம் | நாதம் | சதாசிவம் | மகேசன் | ருத்திரன் | மால் | அயன் |
| = | = | = | = | = | = | = |
| சக்தி | விந்து | மனோன்மணி | மகேசை | உமை | திரு | வாணி |

*ஒன்றின் ஒன்று தோன்றுதல்பற்றிச் சக்தியும் விந்து சிவபேதத்துடன் கூட்டி நவந்தரு பேதம் எனப்பட்டன.*

# 5. கடவுளையடையும் வழிகள்

1. **மோட்சம் அடைவதற்குள்ள நெறிகள் எவை?**

*சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் மோட்சம் அடைவதற்குரிய நெறிகளாம்.*

2. **சரியையாவது யாது?**

*சரியையாவது புறத்தொழில் மாத்திரத்தால் கடவுளின் உருவத் திருமேனியை வழிபடுதலாம். எஜமானனிடம் வேலைக்காரன் வணங்கி நின்று தயவு பெறுவதுபோல நீராடிச் சமயச் சின்னங்களை*

அணிந்து பயபக்தியோடு இறைவனை வணங்கிக் கோயில் கட்டுதல், விக்கிரகம் அமைத்தல், நந்தவனம் வைத்து மலர் கொய்து மாலை கட்டிச்சாத்தல், விளக்குதல், விளக்கிடல், மெழுகல், விழாக் கொண்டாடல் முதலியன செய்து கடவுள் அருள் பெறுதலாம். இதனையே தாசமார்க்கம் எனவும் கூறுவர்.

3. **கிரியையாவது யாது?**

அகத்தொழிலாலும் புறத்தொழிலாலும் கடவுளுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுவதாம். தந்தையிடம் மகன் அன்பாகப் பேசி, அணுகி நின்று, உரிமையுடன் அவர் மனத்தை மகிழ்வித்து, தனக்கு வேண்டியதைப்பெற்றுக் கொள்வதுபோல, கடவுளைக் கும்பங்களிலும் விம்பங்களிலும் இலிங்கங்களிலும் மாலை சாத்திப் பதினாறுவகை உபசாரத்துடன் கும்பிட்டு, நித்திய பூஜையாகிய கிரியைகளைச் செய்து சந்தியாவந்தனம் முதலியவற்றையும் ஒழுங்காய் இயற்றிக் கடவுளைப் பக்கத்தில் கண்டு அன்புருகி என்பிளகி உடல் நெக்கு நெக்குஉருக மகிழ்ந்து நின்று வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வது சத்புத்திர மார்க்கமாகிய கிரியையாகும்.

4. **யோகமாவது யாது?**

அகத்தொழில் மாத்திரத்தால் கடவுளுடைய அருவத் திருமேனியை வழிபடுதலாம். ஒரு நண்பனோடு ஒரு நண்பன் உரிமையுடன் உறவு பாராட்டி, மிக நெருங்கி வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்வது போல, கடவுளைத் தனதுள்ளேயே பிராணனை அடக்கித் தாபித்து,

> ''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
> வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
> நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
> பூசனை ஈசனார்க்குப் போற்று அவிக் காட்டினோமே''

என்றவாறே தன்னுள்ளே தலைவனை உணர்ந்து மூலகுண்டலியை எழுப்பி, புருவமத்தியில் சுடராகிய கொழுந்து விட்டெரியும் உருகிய அமிர்தத்தினை உண்டு, மகிழ்ந்து வேண்டுவன பெறுதலாகிய தோழன் முறையாகிய சகமார்க்கமே யோகம் எனப்படும்.

5. **ஞானமாவது யாது?**

அறிவுமாத்திரத்தினால் உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவிதத் திருமேனிகளையும் கடந்து நிற்கும் அகண்டாகார சோதிமயமான கடவுளை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். ஆசிரியனும் மாணவனுமாகிய இரண்டு பேரும் உடல் வேறானாலும் உயிர் ஒன்றாக நின்று இரண்டும் ஒன்றும் இல்லாமல் சேர்ந்து உரிமை

*உறவு, உயிர்த்துணை பூண்டுள்ளமைபோல, கடவுளுந் தானும் இரண்டற்று ஒன்றேயாகி, தன்னுள்ளே உலகமும் உலகத்துள்ளே தானுமாகி 'அவனே தானேயாகிய அந்நெறி யேகனாகி' தலைவன் தலைவி முறையில் வெளியில் சொல்லமுடியாத பேரின்பத்தை நுகர்ந்து நிற்கும் நிலையில், வேண்டியன பெறுதலாகிய முறையாம் சன்மார்க்கமே ஞானமார்க்கம் எனப்படும். (சன்மார்க்கம் - நன்னெறி).*

6. **ஞானமார்க்கம் ஒன்றே முக்தியடையத் தக்கதாயிருக்க, சரியை முதலியன எதற்கு?**

*ஒரு மலையின் உச்சிக்குப் போக படிவழி ஏறிச் செல்வது போலவும், பத்தாம் வகுப்புக்குப் போக வேண்டிய மாணவன், முதல்வகுப்பு முதல் படித்துப் போவது சரியானமுறையாவது போலவும் சரியை கிரியை யோகங்களிற் பழகி ஞானமார்க்கத்திற் செல்லுதலே படிமுறை வழியாகும்.*

''விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே'' —*தாயுமானவர்*

*என்றபடி அரும்பில்லாது மலரும், மலரில்லாது காயும், காயில்லாது கனியும் உண்டாகாதது போல, சரியையில்லாமல் கிரியையும், கிரியையில்லாமல் யோகமும், யோகமில்லாமல் ஞானமும், ஞானமில்லாமல் மோட்சமும் கைகூடா. ஆதலால், மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் சரியை மார்க்கத்தில் நின்று ஆலய அமைப்பு முறையையும், ஆலய வழிபாட்டு முறையையும், ஆலயபூஜை விளக்கத்தையும், திருவுருவப் பெருமைகளையும் நன்கு அறிந்து வழிபட வேண்டும். தத்தம் தகுதிக்குஏற்பக் கிரியை, யோக, ஞானங்களையும் பற்றி ஒழுக வேண்டும்.*

7. **சரியை முதலியவற்றைக் கைக்கொண்டு நடப்பவர் களுக்குக் கடவுள் அருள்வது எங்ஙனம்?**

*கடவுள் சரியையாளர்க்குத் திருவுருவங்களில் மறைந்து நின்றும், கிரியையாளர்க்கும் யோகிகட்கும் பூஜிக்கும்போது மாத்திரம் தோன்றியும், ஞானிகட்கு அன்பே தாமாய் எப்போதும் விளங்கித் தோன்றியும் அருள்புரிகின்றார்.*

## 6. ஆலயம்

1. **ஆலயம் என்பதன் பொருள் யாது?**

*''ஆலயம்'' என்பதை ஆ+லயம் எனப் பிரிக்கலாம். ''ஆ'' என்பதற்கு ஆன்மா என்று பொருள். ''லயம்'' என்பதற்கு லயிப்பதற்கு அல்லது சேருவதற்கு உரியது என்பது பொருள். ஆகவே, ஆலயம்*

என்பதற்கு ''கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம்'' என்பது பொருள். ஆ என்பது ஆணவ மலத்தையும், லயம் என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கின்றமை யால், ஆலயம் என்பதற்கு ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கூறலாம். இதற்குக் கோயில் என்றும் ஒரு பெயர் உண்டு. அதனைக் கோ+இல் எனப்பிரித்து கோ-கடவுள், இல் - தங்குமிடம், கடவுள் தங்குமிடம் எனப் பொருள் கூறுவர். ஆலயம் - இடம் என்பதே நேரிய பொருள்.

**2. எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுக்கு கோயில் எதற்கு?**

பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நமக்கு உபயோகப்படுத்த வேண்டுமானால் ஒரு கிணறு வெட்டிக் கட்டவேண்டியிருக்கிறது. தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும் கிணற்றினாலேயே நமக்குத் தாகவிடாய்த் தீருகிறது. எலக்ட்ரான் (மின்சாரம்) ஆகாயமெங்கும் வியாபித்திருந்தாலும் 'எலக்ட்ரிஸிட்டி பவர் ஹவுஸ்' (மின்சார நிலையம்) மூலமாகவே நமக்கு அதனை அனுபவிக்கமுடிகிறது. இவற்றைப்போல கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்கள் மூலமாக நின்றே அருள் செய்கின்றார். ஆகையால் அவர் அருள்பெற ஆலயம் இன்றியமையாததாகின்றது.

**3. கோயில்களின் சிறப்புக்கள் எவை?**

ஆலயங்கள் ஒவ்வொன்றும் முதல் நூல்களின்படியே இயற்றப்பட்டுத் தத்துவ ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவிகளாய் விளங்குகின்றன. அவை உயிர்க் குயிராகிய இறைவன் விளங்கி நின்று அருள்புரியும் தூய இடம். கோபுரம், கொடிமரம், பிராகாரங்கள், மண்டபங்கள் முதலியன சிறந்த தத்துவங்களை விளக்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. ஆலயங்களில் நடைபெறும் பஞ்சசுத்தி, பூஜை, நைவேத்தியம், தீபாராதனை, உற்சவம் முதலியனவும் சிறந்த கருத்துக்களை உடையனவாய் இருக்கின்றன. **(ஆலய உட்பொருள் விளக்கம் - ஆசிரியர் I.C.ஈஸ்வரன்பிள்ளை** என்பவர் எழுதிய நூல்களில் விரிவாகக் காணலாம்.)

**4. கோபுரத்தின் தத்துவம் யாது?**

கோபுரம் தூல லிங்கத்தை உணர்த்துகின்றது. ஆலயங்கள் ஓர் யோகியின் சரீரத்தில் அமைந்துள்ள தத்துவங்களை விளக்குகின்றன. யோகியின் பாதம் முதல் தலை வரையுள்ள பாகங்களையும் அவனது இதயத்தில் இறைவன் விளங்கும் தன்மையையும் கோவில்கள் நன்றாகக் காட்டுகின்றன. ஆகவே சரியை, கிரியை உடையவர்களை யோகிகளாக்க ஆலயங்கள் பயன்படுகின்றன எனலாம். கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் ஆகும். இதனை பிரம்மதந்திர மத்யகபாலத்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர்.

**5. கொடிமரத்தின் தத்துவம் யாது?**

*கொடிமரம், யோகியானவன் பிராணவாயுவை நடுநாடியாகிய சுழுமுனையில் அசைவற்று நிறுத்திக் கொண்டு தியானிக்கில் மனம் முதலிய கரணங்கள் யாவும் நின்று பிரபஞ்சமே தோன்றாது சிவதரிசனம் உண்டாகும் என்னும் உண்மையை அறிவிக்கின்றது.*

**7. பிராகாரங்களின் தத்துவம் என்ன?**

*கோயிலினுள்ளிருக்கும் ஐந்து பிராகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன. மூன்று பிராகாரங்கள் ஐந்து கோசங்களினாலான தூல சூட்சும காரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன. வழிபடுவோர் மூன்று முறை பிராகாரங் களைச் சுற்ற வேண்டுமென்பது, பஞ்சகோசங்களையும் மூவகைச் சரீரங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும்.*

**8. கர்ப்பகிருகமாவது யாது?**

*கர்ப்பக்கிருகம் என்பது பிரதான மூர்த்தியை வைத்து வணங்கும் இடமாம். இதற்கு மூலஸ்தானம் என்று பெயர் உண்டு. இதன் உண்மை எல்லா உலகங்களையும் படைத்ததற்குக் காரணமான ஆதி சூக்குமப் பிரகிருதியின் இடம் என்பதாம். கடவுள் உலகைப்படைக்க நினைத்த காலத்து அவரது அருட்சக்தியைச் சத்தமாயையிடத்தே அதிட்டிக்கச் செய்கிறார் என்பது கருத்து. அருவமாகிய கடவுள் அருவுருவத் திருமேனி கொள்கின்றார்.*

**9. மண்டபங்கள் எவ்வகையின, எவற்றை உணர்த்துகின்றன?**

*அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபநமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிரதிஷ்டை, வித்யை, சாந்தி, சாந்தியதீதை என்னும் கலைகளை உணர்த்துகின்றன. மேற்கூறியவற்றால் ஆலயங்கள் மிகவும் அவசியமானவை என்பதும், ஆலய பாகங்கள் பெரும் தத்துவங் களைக் கொண்டுள்ளன என்பதும் விளங்குகின்றன.*

# 7. திருவுருவம்

**1. கடவுள் வழிபாட்டுக்குத் திருவுருவங்களை வழிபடுவது ஏன்?**

*அரசர் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் அரசரையே வைத்துக் கொண்டாட முடியாத குடிகள் அவரது படத்தை வைத்துக் கொண்டாடு வதேன்? அரசரிடத்தில் நமக்குள்ள பக்தியை காட்டுவதற்கன்றோ? இவ்வாறே தந்தையின் படத்தை வைத்து மகன் கொண்டாடுவதும் ஜனத் தலைவரின் படத்தை வைத்து ஜனங்கள் கொண்டாடுவதும் அவர்கள் மீது இவர்கட்குள்ள பக்தியைக் குறிக்கிறதல்லவா?*

ஒரு காதலன் தன் காதலியைப் பிரிந்து அயல்நாடு செல்லும்போது தன் காதலியின் படத்தையும் கொண்டு சென்று மகிழ்கின்றான் அல்லவா? அவனது காதலியும் அயல்நாடு சென்ற காதலனை எண்ணி அவனைக் காணமுடியாது வருந்தி, அவன் படத்தை வைத்து அதனிடம் சிலபேசி அதைப்பார்த்து காதலனைப் புகழ்ந்துரைத்து அதற்கு மாலை சாத்தி, தான் உண்ணப் போகும் பொருள்களை அப்படத்தின் முன் வைத்து காதலனை உண்பித்ததாக எண்ணி ஆடியும் பாடியும் மகிழ்கின்றாள். அயல்நாடு சென்ற காதலன் அவ்வேளையில் அங்கு வந்து மறைவாய் நின்று அவள் செய்யும் செயல்களைக் கண்டு தான் இல்லாத வேளையிலும் தனது படத்தை வைத்து வணங்கும் பதிபக்தியைக் கண்டு மகிழ்வானா? அவள் செயலுக்காக அவளை வருத்தப்படுத்துவானா? நாகரீக மக்களும், உருவவழிபாட்டை ஒத்துக்கொள்ளாதவர்களும் சில மனிதர்களுக்காக படத்திறப்பு விழாக் கொண்டாடுவதும், உருவச்சிலைகள் அமைப்பதும் எதைக் காட்டுகின்றன? அவர்கள் குறித்த மனிதனின் மீதுள்ள பக்தி யல்லவோ? அதுபோல, பக்தன் ஒருவன் கடவுளைக் காண விரும்பி அவர் தம் திருவுருவங்களை அமைத்து வழிபடுகின்றான்.

2. **கடவுளைத் திருவுருவங்களாக வைத்து வணங்குகிறவர்கள் கடவுள் கோபத்துக்கு ஆளாக மாட்டார்களோ?**

அரசனின் படத்தை வைத்துக் கொண்டாலும் நம்மை அரசன் கோபிப்பதுண்டா? தன் படத்தை வைத்துக் கொண்டாடும் தலைவியை தலைவன் கோபிப்பதுண்டா? தன்னை நேரில் காணமுடியாமல் போனாலும், தன் படத்தை வைத்துக்கொண்டாடியதற்காக அரசனும் தலைவனும் மகிழ்ந்து வழிபடுவோருக்கு வேண்டுவன செய்வதுபோல கடவுளும் அவனை நேரில் காணமுடியாது அவன் திருவுருவத்தை வைத்து வணங்கும் அன்பர்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றான்.

3. **விக்கிரகங்கள் கடவுளின் உண்மையான திருவுருவங்கள் தாம் என்பதை எப்படி நிச்சயிக்கலாம்?**

கடவுளைத்தேடிக் கண்டுகொண்ட பெரியார் தான் கண்ட காட்சியைப் பல பாட்டுக்களால் சித்தரித்து வைத்திருக்கின்றார்கள். ஒரு கவி பாடிய பாட்டை வைத்துக் கொண்டு ஒரு சித்திரக்காரன் பாட்டின் பொருள் விளங்கும்படி ஒரு சித்திரம் வரைந்து காட்டுவதுபோல், அவர் பாடிய பாடல்களில் கூறியபடி திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4. **விக்கிரகங்கள் எவ்வித உணர்ச்சியுமற்ற படங்களைப் போன்றவைதானே?**

விக்கிரகங்களில் சுயம்பு ஆகவே முளைத்தவையும் உண்டு; தேவர்கள் ரிஷிகள் முதலிய பெரிய மகான்களால் பிரதிஷ்டிக்கப்

பட்டவையும் உண்டு. பூஜையின் பொருட்டு எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளை மூலமந்திரங்கள் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆகமமுணர்ந்த ஞானிகள் ஆவாகனம் செய்கின்றார்கள். அதன்பின் ''தயாநிதியே! அடியேனை அனுக்ரஹிப்பதற்காக இவ்விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டுமென்று'' அன்புடன் யாசித்து ஸ்தாபனம் செய்கிறார்கள். இதனை ''அலையாது அழுந்த நிலைபெறல் தாபனம்'' என்பதால் அறியலாம். அதன்பின், பலவகைப் பூஜை களாலும், நைவேத்தியங்களாலும், நித்திய நைமித்திக ஆராதனை களாலும், கடவுள் சக்தியை அங்கே நிலைநிறுத்தி வழிபடுவோர் அதிலிருந்து பயன்படும்படி செய்துள்ளார்கள். ஆகையால் விக்கிரகங்கள் படங்களைப்போல் உணர்ச்சியற்றவை களல்ல. படங்களுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையே ஒரு கல் உருண்டைக்கும் ஒரு பீரங்கிக்கும் இடையிலுள்ள பேதங்கள் உள்ளன.

**5. விக்கிரகத்தைக்கொண்டு உயிர்கள் அனுக்கிரகம் பெறுவது எவ்வாறு?**

சூரியன் முன் சிறிது பஞ்சைக்காட்டினால் பஞ்சில் தீப் பிடிப்பதில்லை. சூரியனுக்கும் பஞ்சுக்கும் இடையில் ஒரு சூரியகாந்தக் கண்ணாடியைக் காட்டினால் அது சூரியகிரணத்தை ஒன்று சேர்த்து வெகு சீக்கிரமாகப் பஞ்சில் தீப்பற்றி எறியும்படிச் செய்கிறது; அதுபோல, பஞ்சாகிய நமது உள்ளத்தில் இறைவன் அருளாகிய தீ வெகு துரிதமாய்ப் பற்றுவதற்குக் கண்ணாடியாகிய விக்கிரகம் மிக உதவுகிறது. பசுவின் உடலெங்கும் வியாப்பித்திருக்கும் பால், அதன் மடிவழியாகச் சுரப்பதுபோல, பரந்து கிடக்கும் ஆண்டவனது அருள், விக்கிரகவழியாக நமக்குக் கிடைக்கின்றது.

**6. எங்கும் நிறைந்து விளங்குகிற கடவுள் விக்கிரகங்களில் எவ்வாறிருக்கின்றார்?**

கடவுள் பாலில் நெய்போல் எங்கும் வியாபித்திருப்பினும் விக்கிரகங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்கின்றார்.

**7. சித்தர்களே விக்கிரக வழிபாட்டை இழிவு படுத்திக் கூறியது ஏன்?**

''கல்லிலும் செம்பிலுமே இருப்பான் எங்கள் கண்ணுதலே'' எனக் கூறியதன் கருத்து, கல் செம்பு முதலியவற்றினில் மாத்திரமல்ல கடவுள் இருப்பது, எங்கும் நிறைந்து விளங்குகின்றார் என்பதை விளக்கு வதற்கேயாம்.

''நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ''

''பண்ணேன் உனக்காக பூசை யொரு வடிவிலே''

''தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடும் தீயரே''

என்றெல்லாம் கூறியவர்கள்,

''பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்து பூசை செய்தால் மிஞ்சிய
ஞானம் விளங்கும் பராபரமே'' – எனவும்,

''தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தம் லிங்க தானதாய்த் தெளிந்ததே சிவாயமே''

எனவும் ஏன் கூறல் வேண்டும்? அவர்கள் சிவாலய வழிபாட்டை இழித்துக் கூறியது சிவாலய வழிபாட்டின் தத்துவத்தை உணராது செய்கின்ற கிரியைகள் சீக்கிரம் பயன்கள் தரவாதலால் அவற்றின் உண்மைகளை மக்கள் அறியவேண்டுமென்பதை வற்புறுத்தவே யாகும்.

8. **ஆலயங்களும் விக்கிரகங்களும் பாமர மக்களுக்காக அமைந்தவை தானே?**

சரியையாளர் முதல் ஞானிகள் வரை எல்லா மக்களுக்கும் விக்கிரக வழிபாடு இன்றியமையாததே. ஞானிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் விக்கிரக வழிபாடு செய்யவில்லையா? இவர்களைப் பாமரர்கள் என்று சொல்லலாமா? இவர்கள் விக்கிரகங்கள் வாயிலாக அருள்பெறவில்லையா? இவற்றை உற்று நோக்குமிடத்து விக்கிரக வழிபாடு பரம ஞானிகள் வரை யாவருக்கும் இன்றியமையாது வேண்டற்பாலதே என்பது விளங்கும்.

ஒவ்வொரு விக்கிரகத்தின் தத்துவங்களையும் அடியில் ஒவ்வொரு பாடமாக விளக்கியிருப்பதால் இங்கு இத்துடன் இது நிறுத்தப் பட்டிருக்கிறது.



## 8. சிவலிங்கம்

1. சிவாலயங்களில் காணும் விக்கிரகங்களில் சிவலிங்கமே முக்கியமான விக்கிரகமாம்.

2. சிவலிங்கம் என்பதன் பொருள் சிவம்+லிங்கம் = சிவலிங்கம். சிவம் = கடவுள். லிங்கம் = அடையாளம். கடவுளைக் காட்டும் குறி அல்லது அடையாளம் என்பது பொருள்.

3. லிங்கம் என்பதன் விரிந்த பொருள் லி = லயம், ஒடுங்குதல். கம் = போதல், தோன்றுதல். ஆன்மாக்களும் உலகங்களும் ஒடுங்குவதற்கும் மீளத்தோன்றுவதற்குமான இடம் என்பது பொருள்.

4. சிவலிங்கத்தின் அமைப்பு இந்த விக்கிரகத்தின் அடிப் பாகத்தில் உடுக்குப் போன்ற பீடம் ஒன்று காணப்படும். இதற்கு ஆவுடையென்று பெயர். இதன்மேல் உருண்டு, நீண்ட, முனையற்ற

தண்டொன்று காணப்படும். இதற்குப் பாணம் அல்லது லிங்கம் என்று பெயர். இவற்றுடன் ஆவுடையின் மேற்பாகத்தில் ஒரு பக்கமாகக் கோமுகம் ஒன்றுங் காணப்படும்.

5. **சிவலிங்க உருவம் எதை விளக்குகின்றது?**

சிவலிங்கம் ஓர் உருவமாக அமைந்திருந்தாலும், அது மற்ற விக்கிரகங்களைப் போன்று மனிதரூபத்தோடு அமைந்திருக்கவில்லை. முன்னர்க் கூறியதுபோல் அருவமாகிய இறைவன், மற்றைய உருவங்களெல்லாம் தோன்றுவதற்கும் இறுதியில் எல்லாம் தன்னுள் லயமாவதற்குமாக ஒரு திருவுருவத்தைக் கொள்ள வேண்டியவ னாகிறான். அவ்வாறு அவன் கொண்ட அருவுருவமாகிய சதாசிவமே சிவலிங்கமாம்.

6. **இறைவன் சிவலிங்க வடிவமாகவே அருவுருவத் திருமேனியைக் கொண்டனன் என்பதை எவ்வாறு ஊகித்தறியலாம்?**

பெற்றோர் சாயல் அவரிடம் பிறந்த பிள்ளைகளுக்கும் இருப்பதுபோல் பூமி, சூரியன், சந்திரன் முதலிய அண்டங்களும்; பிண்டங்களும்; முட்டைகளும்; காய்கனிகளும்; பூக்களின் அண்டாசயங்களும்; கார்த்திகைத் தீப முதல் நம் வீடுகளில் எரியும் விளக்குச் சுவாலைவரை காணும் சோதி வடிவங்களும்; யோகிகளின் யோகத் திருவுருவங்களும் பிறவும் ஏகதேசம் சிவலிங்க வடிவமாகவே காணப்படுகின்றன. ஆகவே, இவை தோன்றுவதற்குக் காரணமாகிய இறைவனும் இத்தகைய ஒரு திருவுருமாகிய சிவலிங்க உருவத் தினையே கொண்டுளான் என்பதை நிச்சயிக்கலாம்.

அணுவுலக ஆராய்ச்சியாளர், அணுவுக்கு அணுவாக எவ்விடத்தும் விளங்கும் எலக்ட்ரானைப் பரிசோதித்துப் பார்த்ததிற் பச்சை நிறமான ஒரு வட்டத்தின் நடுவில் செந்நிறம் பொருந்திய ஒரு சோதி துலங்கக் கண்டுள்ளார்கள். இப்பச்சை வடிவம் ஆவுடை யினையும், சோதி வடிவம் சிவலிங்கத்தினையும் போன்றுள்ளன. ஆகவே, எலக்ட்ரான் வியாபித்த உலகமெங்கும் சிவலிங்க வடிவம் தோன்றுவதாலும் இறைவன் கொண்ட அருவுருவத் தோற்றம் சிவலிங்க வடிவமெனத் தெளியலாம்.

7. சிவலிங்கம் திரிமூர்த்தி சொரூபம் என்பது அருவுருவ மூர்த்தியாகிய பின்னரே இறைவன் அனைத்தையும் படைத்து அளித்து அழிப்ப மூம்மூர்த்தி களாயினமையால் சிவலிங்கம் திரிமூர்த்தி சொரூபமாயிருக்கிறது. ஆவுடையில் பிரம்ம விஷ்ணுக்களும், பாணத்தில் சிவனும் அடக்கம் என்பார்கள்.

8. **அருவ இறைவன் முறையே அருவுருவாகவும் உருவாகவும் ஆயினன் என்பதை எவ்வாறு ஊகித்தறியலாம்?**

ஒரு மரம் ஒரு வித்திலிருந்து பிறக்கிறதை நாம் பார்க்கிறோம். மரத்தை உருவமாகக் காண்பதற்குமுன் அது அருவுருவமாகிய வித்து வடிவத்தோடு இருக்கிறது. அம்மரமே வித்தாகத் தோன்றுவதற்குமுன் எவ்வித உருவமும் இல்லாததாயிருக்கிறது. ஒரு விதை இங்ஙனம் அருவமாயிருந்து அருவுருவமாகி உருவத்தைப் பெறுகின்றது. இது போலவே ஒரு குட்டியும், ஒரு பிள்ளையும் ஒரு பிண்டத்தில் தோன்றுகின்றன. பிண்டமும் எவ்வித உருவமுமற்ற ஒன்றிலிருந்து உண்டாகிறது. இவையனைத்தையும் உற்று நோக்குமிடத்துச் சராசரங்கள் எல்லாம் இவ்வகையில் திருவுருங்கள் பெறுமாறு இயக்கும் இறைவனும் இவ்வகையிலேயே திருவுருவம் கொண்டிருத்தல் வேண்டுமென்று நிச்சயிக்கலாம்.

9. ஆவுடை என்பது அடியில் பீடமாயிருப்பது. அது சக்தியைக் குறிக்கிறது.

10. **பாணம் அல்லது லிங்கம் எதைக் குறிக்கின்றது?**

லிங்கம் ஆவுடையின்மீது தோன்றிச் சிவத்தினது உண்மைச் சொரூபமாகிய பரவெளியைக் குறிக்கின்றது.

11. **பரவெளி எதைக் குறிக்கின்றது?**

பரவெளி முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தது. 'ஞானாகாசம்' என்று சொல்லப்படும். இப்பரவெளி சிதம்பரம் எனவும், திருஅம்பலம், சிற்றம்பலம் எனவும் கூறப்படும். இந்தப் பரவெளியிலேதான் நடராஜர் ஐந்தொழில் நடனஞ் செய்கின்றார். இந்நடன விசேடங்கள் ''நடராஜர்'' என்ற பாடத்தில் விளக்கப் பட்டுள்ளன. இந்நடன தரிசனத்தையே சிதம்பரத்தில் ''இரகசிய தரிசனம்'' என்பர். இப்பரவெளியில் நடராசர் செய்யும் நடனத்தி னாலேதான் எல்லாச் சராசரங்களும் இயங்குகின்றன.

12. **இலிங்கம் ஆவுடையாளாகிய பீடத்தை ஊடுருவிச் சென்றிருப்பது எதைக் காட்டுகிறது?**

பரவெளியாகிய சிவம் அல்லது நாதம், சக்தி அல்லது விந்துவை ஊடுருவி வியாபித்திருக்கிறது என்பதையும் ஒன்று மற்றொன்றைப் பிரியாமல் சேர்ந்திருக்கின்றன என்பதையும் காட்டுகின்றது.

13. **ஆவுடை லிங்கத்தின் கீழ் அடங்கியிருத்தல் எதனைக் குறிக்கின்றது?**

சக்தி, சிவத்துக்குள்ளே அடங்கித் தொழில்கள் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

14. **கோமுகி என்பது யாது? அஃது எதைக் குறிக்கின்றது?**

ஆவுடையாளின் மேற்பாகத்தில் வெளியே நீண்டிருக்கும் இது சிவசக்தி உயிர்களுக்குச் செய்யும் தண்ணளியைக் குறிக்கின்றது. இதனாலேயே ஆலய வழிபாடு செய்யும் அடியார்கள் கோமுகி வழியாகப் பாயும் அபிஷேக தீர்த்தங்களை இறைவனது திருவருள் சுரப்பதாக மதித்துக் கையால் ஏந்தித் தலையில் தெளித்துச் சிவனருள் பெற்றதாக மகிழ்கிறார்கள்.

15. **சிவலிங்கத்தின் முன்பாகக் காணப்படும் நந்தி அல்லது காளைமாடு எதை உணர்த்துகிறது?**

*மாடு என்பது சாஸ்திரங்களில் தர்மதேவதை கொள்ளும் உருவம்; ஆதலால் மாடு தர்மத்தை உணர்த்தும். நந்தி என்பதற்கு ஆனந்திப்பது என்றும் பொருள் உண்டு. வெண்மையான மாடாதலால் ஸாத்வீகத்தையும், பரம்பொருளாகிய லிங்கத்தினிடம் கொண்டு சேர்க்கும் சத்துவ குணங்களாகிய சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாதுசங்கமம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களையும் உணர்த்தும்.*

16. **''நந்தியின் அனுமதியின்றிச் சிவதரிசனம் செய்யமுடியாது'' என்பதன் இரகசியம் யாது?**

*முற்கூறிய நான்கு ஆத்ம குணங்களும் ஒருவனுக்கு ஏற்பட்டாலல்லது கடவுளைச் சச்சிதானந்த அறிகுறியாக உணரமுடியாது என்ற வேத ரகசியத்தை வெளிப்படுத்தும்.*

17. **கோயிலில் பிரதக்ஷணாதிகள் செய்யுங்கால் நந்திக்கும் இலிங்கத்திற்கும் குறுக்கே போகலாகாது; நந்தியையும் சுற்ற வேண்டும் என்பதன் இரகசியம் என்ன?**

*சச்சிதானந்த அனுபவத்திலிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்ச விவகாரத்தில் வரும்போது, மேற்கூறிய ஆத்ம குணங்கள் வழியாக அனுபவம் சேரும் வழிக்கு விரோதமானவற்றைச் செய்யாது ஆத்ம குணங்களிலேயே நிற்க வேண்டும் என்பதாம்.*

18. **சக்தி, சிவம் அவற்றின் விளையாட்டு என்ற இவற்றை விஞ்ஞானிகள் எவற்றோடு உவமிக்கிறார்கள்?**

*சிவம் - மேட்டர்* (Matter), *சக்தி - எனர்ஜி* (Energy)

*விளையாட்டு - ஆக்டிவிட்டி* (Activity) *சிவ சக்திகளை ''கைனிட்டிக் எனர்ஜி'' - ''பொட்டன்ஷியல் எனர்ஜி'' என்றும் கூறுகிறார்கள்.*

19. ***இவற்றை நாம் அறிய வேண்டுவது எதற்கு?**

*சிவலிங்கத்தைப் பற்றி ஆபாசமாகச் சிலர் அறிவின்றிக் கூறும் இழிப்புரைகளை ஒழிப்பதற்கும், சிவலிங்க வழிபாடு செய்கின்ற வர்கள் இதன் தத்துவத்தை உணர்ந்து வழிபட்டால் மாத்திரமே நன்மைபெறக் கூடுமாகையினாலும் இத்தத்துவங்கள் அன்பர்கள் அனைவரும் ஐயந்திரிபற அறிதற்குரியனவாம்.*

# 9. விநாயகர்

1. *''விநாயகர்'' என்ற சொல்லின் பொருள் தமக்குத்தலைவர் இல்லாதவர், ஒப்புயர்வற்றவர் என்பது பொருளாம். சிறந்த, நாயகர், தலைவர், நடத்துவோர் என்பதும் பொருளாம்.*

2. *விநாயகர் திருவுருவத்தின் அமைப்பு யானை முகம், ஒடிந்த கொம்பு, பருத்த தொந்தி, இடக்கையில் மோதகம், மூஷிக வாகனம் இவற்றுடன் இருந்த கோலத்தில் விளங்குவதே இத்திருவுருவத்தின் அமைப்பாம்.*



3. **இவர் பரமசிவன்றன் மூத்தகுமாரர் என்று கூறப்படுவானேன்?**

*எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு ''ஓம்'' எனும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது ஓங்காரப் பிரணவமே யாகையால் இவர் ''பிரணவகணபதி'' யென்றும், ''ஓங்கார உருவன்'' என்றும் பரமசிவனது மூத்தப்பிள்ளை என்றும் அழைக்கப்படுகிறார்.*

4. **ஓங்கார ஒலியின் வரிவடிவமே விநாயகர் என்பதை எவ்வாறு விளக்கலாம்?**

*ஒடிந்த கொம்பு ''ஓ'' என்ற எழுத்தின் சுழி இருக்குமிடம். இவ்வெழுத்து இங்கிருந்து தொடங்கி வலக்கை வழியாகக் கிரீடத்தைச்சுற்றி, இடக்கைப் பாசம் வரையில் வந்து திரும்பி வளைந்து, நெற்றிப் பொட்டு வரையிற் போய்த் துதிக்கை வழியாகக் கீழிடக்கை வந்து கால்வரை இறங்கும். இடக்கையும் மோதகமும் ''ம்'' என்பதைக் குறிக்கின்றன. ஆகையால் விநாயகர் திருவுருவம் ஓங்காரவடிவமேயாகும்.*

5. **இந்த விக்கிரகத்துக்கு யானைமுகம் அமைக்கப் பட்டதேன்?**

*யானையின் குரலொலி உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக் காட்டிலும் ஓங்காரப் பிரணவ ஒலியை நன்கு ஒலிப்பதால் யானைமுகம் இவருக்கு அமைக்கப்பட்டது.*

6. **எல்லா வழிபாடுகளிலும் விநாயகர் வழிபாடு முதலாவதாகச் செய்வது எதற்கு?**

*பிரணவஒலி எல்லாவற்றிற்கும் முதலாவதாக விளங்குவது; ஆகையால் விநாயகரும் முதலாவதாக வைத்துப் பூஜிக்கப்படுகிறார்.*

7. **அவர் பெரிய வயிறு உடையவராய் இருப்பது எதைக் குறிக்கிறது?**

*ஓங்காரத்துள் எல்லா அண்டங்களும் அடங்கிக் கிடக்கின்றன என்பதைக் காட்டுகிறது.*

8. **மோதகம் அல்லது அமிர்த கலசம் எதைக் குறிக்கின்றது?**

*அழிவற்ற தன்மை, பேரின்பம் முதலிய மங்கலக் குணங்கள் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன என்பதைக் காட்டுகின்றது.*

9. **இவருக்கு மூஞ்சூறு வாஹனம் ஆனது ஏன்?**

*விநாயகர் ஓங்காரப் பிரணவரூபி என்றபோது அது மகா பெரிய அண்டங்களையும் தனதுட்கொண்ட பிர்ம்மாண்ட வடிவமென நமக்குப்படுகிறது. அவருக்கு வாஹனம் மூஞ்சூறு என்றபோது மூஞ்சூறு தாங்கத்தக்க சிற்றுருவினர் என்பதும் தெரிகிறது. ஆதலால் கடவுள் அணுவுக்கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும் இருக்கிறார் என்பதை உணர்த்த மூஞ்சூறு வாகனமாயிற்று. ஆகவே, கடவுளிட மிருந்து முதலாவது உண்டாகிய ஓங்காரப் பிரணவ ஒலியின் உருவமே விநாயகர் திருவுருவம் என்பது பெறப்படும்.*

# 10. நடராஜர்

1. **நடராஜர் நடனமாடிக் கொண்டு இருப்பது ஏன்?**



*அணுக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் 'அணுக்களெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன' என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க, காரணம் காணமுடியாது கலங்கினர். அதன்பின் நமது தெய்வம் நடனமாடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ்ஞானிகள் இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள்ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடன மூர்த்தி யாயிருக்க வேண்டும். ஆதலினாலேயே நடராஜர் திருவுரு நடனமாடும் ரூபமாக விளங்குகிறது.* ***மனிதர்களுடைய நோக்கம் துக்கம் நீங்கிச் சுகம் அடைய வேண்டும் என்பதேயாகும். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம் புரிவதால் எப்போதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பது தெரிகிறது.***

2. **நடராஜர் திருவுருவத்தின் அமைப்பு:** *இவ்விக்கிரகம் ஒரு மனிதன் நடனமாடும் ரூபமாக அமைந்திருக்கிறது. வலக்காலைக் கீழே ஓர் அரக்கன் மேல் மிதித்து இடக்காலை மேலே உயர்த்தி, ஓர் இடக்கையால் தூக்கிய பாதத்தைக் காட்டி மற்றைய இடக்கையில் அக்னியைத் தாங்கி ஒரு வலக்கையில் அபய ஹஸ்தம் பிடித்து மற்றொரு வலக்கையில் உடுக்கையினைப் பிடித்து நிற்பதாக இத்திருவுருவம் அமைந்துள்ளது.*

3. **இவரது ஒரு வலக்கையில் உடுக்கை இருப்பதேன்?**

*உடுக்கையிலிருந்து வரும் ஒலியால் அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் பெரிய தீயிலிருந்து பொறிகளும் ஊற்று நீரிலிருந்து குமிழிகளும் வருவன போன்று, இறைவனிடமிருந்து தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும். ஆகவே இது சிருஷ்டி அல்லது ஆக்கத்தை*

உணர்த்துகின்றது. ''உலகம் சப்தத்தில் பிறந்து அதிலேயே நிலை பெற்றிருப்பது'' என வேதம் கூறுகின்றது.

**4. அபயஹஸ்தத்தின் கருத்தென்ன?**

இது அமைதிக்குறியைக் காட்டுகிறது. ''அங்ஙனமே யாகுக'' என்பதைக் காட்டி உலகம் முழுவதும் மாறாமலும் தவறாமலும் ஒழுங்காய்ப் பரிபாலனம் செய்யப்படுவதை இது குறிக்கின்றது. ''இறைவன் திருவடியே தஞ்சமென வந்தடைந்தார்களைக் காப்பாற்று வேன்'' என கூறுவது போல அமைந்திருக்கிறது. ஆகவே, இது ஸ்திதி அல்லது காத்தலைக் குறிக்கின்றது.

**5. இடக்கையில் தாங்கியிருக்கும் தீ எதை உணர்த்து கின்றது?**

எல்லா உலகங்களும் இறுதியில் அனித்தியமாக்கும் சம்ஹார சக்தியை அல்லது அழித்தலை உணர்த்துகின்றது.

**6. ஊன்றிய வலக்கால் எதை உணர்த்துகின்றது?**

படைத்தல் முதலிய விஷயங்களை எவருக்கும் விளங்க வொட்டாமல் மறைக்கும் மாயாசக்தியை உணர்த்துகின்றது. உயிர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு அவை இன்ப துன்பங்களை நுகரும்படிச் செய்தலாகிய ''திரோபவம்'' அல்லது ''மறைத்தலை'' இது உணர்த்துகின்றது.

**7. தூக்கிய பாதம் எதை உணர்த்துகின்றது?**

குஞ்சிதபாதமாகிய தூக்கியிருக்கும் இடக்கால் எல்லோரையும் மயக்கும்படியானதும், அனாதியும், அனந்தமுமாயுள்ள சிருஷ்டியாதி நாடகத்திலிருந்து உயிர் விடுபட்டு ஓய்வடையும்படிச்செய்யும் நிழற்போன்ற கடவுளின் கருணையைக் குறிக்கின்றது. இப்பாதத்தை ஓர் இடக்கை சுட்டிக்காட்டி, நமக்கு உபதேசிக்கும் குருவைப்போல் **''ஆண்டவன் திருவடியன்றி உயிர்களுக்குக் கதியில்லை ஆதலால் அதனை அடைய முயலுங்கள்''** என உபதேசிப்பது போல் இருக்கின்றது. ஆகவே, தூக்கிய பாதம் அனுக்கிரகம் அல்லது அருளைக் குறிக்கின்றது. ஆகவே, நடராஜரது ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்தியத் தாண்டவம் என மதிக்கப்படும். இது கடவுளது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் ஆகிய ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை நன்கு விளக்குகின்றது.

''தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தை நாடு''.

என்னும் பாட்டும் இதனை விளக்கும். மேலும் இப்பெருமானது திருநடனம்,

''மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள்தானெடுத்து - நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவை தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்''. - உண்மை விளக்கம்

என்றபடி மாயையை அகற்றி, வினைகளைத் தொலைத்து மலங்களை நீக்கி, உயிர்களைச் சகல கேவலங்களினின்றும் சுத்த அருள் நிலையில் நிறுத்தி, மோட்சத்தைத் தருகின்றது என்பதைக் காட்டுகிறது. ஆதலால் நாம் நடராஜப் பெருமானின் திருவுருவச் சிறப்பினை நினைத்து வழிபடுவோமாக.

## 11. மகேசன்

1. மகேசன் என்பவர் ஆண்டவனது உருவத் திருமேனிகளான மகேசன், உருத்திரன், மால், அயன் என்ற நான்கினுள்ளும் முதலாவதும், தலைசிறந்ததுமான உருவத்தைக் கொண்டவரே இவர். இவர் ஈசுவரன் என்றும் அழைக்கப் படுவார்.

2. இந்தத் திருவுருவத்தின் அமைப்பு பிறையினையும், கங்கையையும் சடைமுடி யினிடத்தே தரித்து, பாம்பினை மாலையாக உடையவராய், திருநீறு அணிந்து, சக்தியை ஒருபாகத்தில் அமர்த்தி இடபவாகன ஆரூடராயிருப்பதாம்.

3. இவரது வாகனம் வெள்ளிய இடபமாவது, இடபம் அறவடிவம், இது சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமமாகிய நான்கு குணங்களையும் நான்கு கால்களாக கொண்டிருக்கிறது. விடையின்மீது பரமேஸ்வரன் ஆரோகணிப்பது இந்நான்கு வகை ஆத்ம குணங்களையும் கொண்ட உயிர்களிடத்து மாத்திரமே இறைவன் வீற்றிருந்து அருள் செய்வன் என்னும் தத்துவத்தை விளக்குவதாகும்.

4. இவர் நிலையாமையை உணர்த்தி அருளொளி நல்கி எல்லா உயிர்களுக்கும் நற்பயனளிக்க இவர் வெண்ணீறணிந் திருக்கின்றார். நாமும் இவரைப்போல் வெண்ணீறணிய வேண்டும் என்பதையும் இது காட்டும்.

5. இவர் அரவம் அணிந்திருப்பது அரவம் அணிவதால் உலகத்தினை இயக்கும் தனது ஆற்றலை உணர்த்துகிறார். அரவம் குண்டலிசக்தியைக் குறிக்கும்.

6. இவர் மறையோதுவது நமக்கு மெய்யறிவினை தருதற் பொருட்டும், நாமும் அதுபோல் ஓதுதற்பொருட்டும் இவர்

*இங்ஙனம் செய்கின்றார். மறைகள் அனைத்தையும் கொடுப்பவர் சிவபிரானே என்பது கருத்து.*

7. **சடையில் கங்கையைத் தரித்திருப்பதேன்?**

*பகீரதன் தன் மூதாதையரை எழுப்பத் தேவகங்கையை தவ வலிமையால் பூவுலகுக்குக் கொணர்ந்தான். அது உலகத்தை அழித்துவிடக்கூடுமாதலால் அதனை இறைவன் தன் சடையில் வாங்கிச் சிறிது உலகத்திற்கு தந்தனன் என்பது வரலாறு. இறைவனைத் தரிசிக்காதவிடத்து உயிர் பரிசுத்தம் பெறாது என்பது இதன் தத்துவார்த்தமாம். இறைவன் சடை ஆகாயம் ஆகும். மழைக்குக் காரணமாய் அங்குள்ள நீராவியே கங்கையாகும்.*

8. **இவர் மூன்றாம் பிறைச்சந்திரன் அணிந்திருப்பது எதைக் குறிக்கும்?**

*தக்கனால் அடைந்த பெருஞ்சாபத்தினை நீக்கச் சந்திரன் இறைவனை அடைக்கலம் புக, அவன் அதை நீக்கி இரட்சித்து அவன் கலையைச் சடைமுடியில் தரித்துக் கொண்டான் என்பது வரலாறு. இஃது இறைவன் தன்னை அன்புடன் அடைந்தவரை காத்து இரட்சிப்பான் என்பதை உணர்த்துகின்றது.*

9. *இவர் தம் சக்தி மகேசை அல்லது பார்வதி.*

10. **பார்வதிக்குப் பாதி உடல் கொடுத்தார் என்பதன் கருத்தென்ன?**

*இவர் வேறு; இவரது சக்தி வேறு அல்ல என்பதை இது குறிக்கின்றது. சூரியனும் ஒளியும் போல இறைவன் ஆனந்த மயமும் அருளொளியுமாய் உளன் என்பதை உருவத்திலும் இது காட்டுகின்றது.*

# 12. முருகன்

1. **'முருகன்' என்ற சொல்லின் பொருள் யாது?**

*முருகன் என்பதற்கு முருகினையுடையவன் என்பது பொருள். முருகு என்பதற்கு அழகு, இளமை, மணம், தேன் கடவுட்டன்மை என்பன பொருள்களாம். ஆகவே, 'முருகன்' என்ற சொல், என்றும் அழியாத அழகினை யுடையவன் என்றும், என்றும் மாறாத இளமையினை யுடையவன் என்றும், என்றும் நீங்காத நறுமணத்தினை யுடையவன் என்றும், தேன் போன்று இனிக்கின்றவன் என்றும், பரிபூரண கடவுட்டன்மை நிறைந்துள்ளவன் என்றும் பொருள்படு கின்றது. நம்முடைய அழகு, இளமை முதலியன என்றும் நிலைபெற்று நிற்பவை அல்ல. ஆனால் முருகன்றன் அழகு, இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பன.*

2. **முருகன் பரமசிவனுக்கு இடைக்காலத்திற் பிறந்த மகன்தானே? அவன் முழுமுதற் கடவுளாவானா?**

இக்கேள்விக்கு முருகனது திருவவதாரத்தை கூறும் கந்தபுராணமே தக்க விடை கூறுகின்றது. சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபிரானிடம் சென்று,



"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி
வேதமும் கடந்துநின்ற விமல! ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"

என்றார். இப்பாட்டினை உற்றுநோக்குவோம். முழுமுதற் கடவுளின் இலக்கணங்களையெல்லாம் தேவர்களே எடுத்துக்கூறி, ஆதியற்ற குமரனை நின்பால் நீயே தரல் வேண்டும் என்கின்றனர். ஆகையால் தேவர்களுக்கும் சிவபெருமானே ஒரு குமரனாய்த் தோன்ற வேண்டும் என்ற கருத்து இருந்ததாகத் தெரிகிறது. சிவபெருமானே ஆறுமுகங் களைக் கொண்டு ஆறு நெற்றிக்கண் களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் தோற்றுவிக்க, அந்த ஆறும் சரவணம் சேர்ந்து அறுமுகன் ஒருவனாகத் திருஅவதாரமாயின என்றே நாம் அறிகிறோம். இவற்றிலிருந்து ஈசனே அறுமுகனாத் தோன்றினான் என்பது வெளிப்படும். இக்கருத்தை வலியுறுத்தவே கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்,

"ஈசனே அவனாடலால் மதலையாயினன் காண்
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்"

என்று கூறியுள்ளார்.

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்" - கந்தரனுபூதி

என்பதிலிருந்தும் முருகன் இடைக்காலத்தில் தோன்றியவன் அல்லன் என்பதும் முழுமுதற்கடவுளே முருகனாகத் தோன்றினன் என்பதும் விளங்கும்.

4. **முருகனது திருவுருவத்தின் அமைப்பு யாது?**

ஆறுமுகங்கள், பன்னிரண்டு கரங்கள் அழகிய வடிவேல் இவற்றைக் கொண்டு, வள்ளி தெய்வயானை என இரு சக்திகள் சமேதராக விளங்குவதே முருகனது உருவத்தோற்ற அமைப்பாம்.

5. **முருகன் ஆறுமுகம் கொண்டதேன்?**

பரமேசுவரனுக்குள்ள ஐந்து முகத்தோடு அதோ முகத்தினையும் கொண்டு முருகன் அறுமுகனாயினன். சிவத்துக்குரிய ஐந்து முகத்தினையும், சக்திக்குரிய ஒரு முகத்தினையும் கொண்டு அறுமுகனாயினன் எனவும், நான்கு திசைகளையும் மேல்கீழிடங்

*களையும் நோக்கி அனைத்தையும் பரிபாலனஞ்செய்ய இறைவன் அறுமுகனாயினன் எனவும் கூறுவர்.*

6. **இவர் தம் ஆறுமுகங்களுள் ஒவ்வொன்றும் செய்யும் தொழில்கள் யாவை?**

''மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திரவிதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கருவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே'' - *திருமுருகாற்றுப்படை*

*(அ) ஒரு முகமானது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும் பொருட்டுப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது.*

*(ஆ) ஒரு முகமானது அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள் மேற்சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.*

*(இ) ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வராதபடி நினையா நிற்கும்.*

*(ஈ) ஒரு முகமானது வேதாகமங்களிலே மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பம் பொருந்தும்படி ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப் போலத் திசைகள் எல்லாவற்றையும் விளக்கும்.*

*(உ) ஒரு முகமானது திருவுள்ளத்திலே நிகழா நின்ற சமத்துவத்தை ஒழித்து கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது.*

*(ஊ) ஒரு முகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும் கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளி நாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று. இவ்வாறு இவ்வறு*

முகங்களும் அவ்வம்முகங்களுக் கேற்ப ஒவ்வோர் தொழிலினைக் கொண்டு விளங்கும்.

**7. பன்னிரு கரங்கள் செய்யும் தொழில்கள் யாவை?**

ஒரு கை தேவர்களையும் முனிவர்களையும் பாதுகாக்க அமைந்தது. அதற்கிணையான ஒரு கை மருங்கிலே கிடக்கின்றது. மூன்றாவது கை அங்குசத்தை செலுத்துகின்றது; அதற்கிணையான கை ஆடையுடுத்திய தொடையில் கிடக்கின்றது. ஐந்தாவதும் ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையோடு வேலாயுதத்தை வலமாகச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரையிறந்த பொருளையுணர்ந்த மார்போடு சேர்ந்து விளங்க, எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங்கும் மாலையுடனே சேர்ந்து விளங்குகின்றது. ஒன்பதாவது கை வளைகளுடனே மேலே சுழன்று களவேள்வியை வேட்கும் முத்திரை கொடுக்கின்றது. இதற்கிணையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்ணுகின்றது. பதினொன்றாவது கை மழையைப் பெய்விக்கின்றது. அதற்கு இணையான மற்றொரு கை தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டுகின்றது.

**8. வள்ளி, தெய்வானை வடிவேல் இவை எவற்றை உணர்த்து கின்றன?**

வள்ளியம்மை கிரியாசக்தி, தெய்வயானையம்மை ஞானசக்தி, வேல் இச்சை ஞானம் கிரியை மூன்றும் கிளையாயுள்ள சக்தி வடிவு.

**9. இவர் சூரசம்ஹாரம் செய்தது ஏன்?**

இறைவனது கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், பொல்லாத வர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்கின்றான். சூரன்தான் பெற்ற வரத்தால் நன்மக்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் பல செய்தான். அவன் மேலும் இவ்வுடலோடு நீண்ட காலம் இவ்வுலகில் தங்கினால் பலப்பல பாவச்செயல்களைச் செய்து மீளா நரகத்திற்கு ஆளாவான் என்பதையும், தவத்தால் வரம்பல பெற்ற இவன் பெரும் பாவியாகி விடக்கூடாது என்பதனையும் கருணையால் நினைந்து இறைவன் குமரநாயகனாகத் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினை இருகூறாக்கி, அவற்றுள் ஒன்றினை மயில் வாகனமாகவும், மற்றொன்றினைச் சேவற்கொடியாகவும் தன்னோடு சேர்த்துக் கொண்டான். இதனை விளக்கவே, திருவிழாக்களில் சூரசம்ஹாரம் முடிந்தவுடன் முருகனை மயில் வாகனத்தில் ஏற்றுகின்றார்கள். அப்பொழுது அவனுக்குச் சேவல் கொடியாகிறது. இதிலிருந்து முருகன் சூரனைக் கொல்லவில்லை யென்பதும், மறக்கருணையால் ஆட்கொண்டான் என்பதும் நன்கு விளங்குகின்றன.

**10. கடவுள் உயிர்களிடத்து அன்பின்றி உயிர்களை ஒறுத்தலும் அழித்தலும் செய்வது ஏன்?**

*பெற்றோர் தம்பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டால் தாமே அந்நோயினை மாற்றவேண்டியதைச் செய்கின்றார்கள். கத்தியால் அறுத்தும் சுட்டும் கடுந்துன்பம் செய்வித்தும் அதனைப் போக்குகின்றார்கள். இச்செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிட மிருக்கும் அன்பினைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பினை யல்லவோ காட்டுகிறது; அதுபோல நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்ப்பதற்குப் பரமன், கருணையாலேயே இவைபோல் வனவற்றைச் செய்கிறான். இதனைத்,*

''தந்தையாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொலாற்றின்
வந்திடாவிடில் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்எல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமையன்றோ ஈசனார் முனிவுமென்றும்''

*எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தினாலும் அறிக.*

**11. சூரசம்ஹாரத்தின் தத்துவம் யாது?**

*சூரன் ஆணவமலம் நிறைந்த ஓர் உயிர். ஆணவமலம் முதிர்ந்த உயிர் ஒருபோதும் இறைவனைக் காணாது. அம்முனைப்பு ஒடுங்கியபோது அஃது இறைவனைக் காணும். ஆணவமலம் நிலை நிற்கும் காலம்வரை அது பிறந்து இறந்து பேதைமையுற்றுத் தவிக்கும்; ஆதலால் அம்முனைப்பாம் அரக்கனைக் கொன்றாலல்லது உயிருக்குப் பிணிமூப்புச் சாக்காடொழித்து இறைவனொடு ஒன்றி வாழ இயலாது. அவ்வாறு ஆணவமலத்தைப் போக்கும் ஆற்றலுடையவன் இறைவனே. அவன் உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், ஆணவ மலமாகிய சூரனது தூல உடம்பை அகற்றி ஆணவமலம் நீங்கின அநாதித்தன்மையுள்ள ஆத்மாவாகிய அவனது உயிரினைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளுகின்றான் என்பது தத்துவம்.*

**12. வள்ளி திருமணத்தின் தத்துவம் யாது?**

*சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்திற் கூறியவாறு ''உயிர் தன்னியல் பறியாது கருவிகளின் இயல்பே தன்னியல்பென மயங்கி உணர்வற்றுக் கிடக்கும் பொழுது, இறைவன் தோன்றி உணர்வினை நல்கி, உபதேசித்துத் தன்னோடு இரண்டறச் சேர்த்துக் கொள்ளுவன்'' என்பதே இதன் தத்துவமாம்.*

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே'' - *சிவஞானபோதம்*

**13. பராசக்தியாகிய வள்ளிநாயகி தினைப்புனங் காப்பது எதனைக் குறிக்கின்றது?**

*உயிர் தன்னியல்பறியாது, வேடர் சேரியில் வளரும் அரசகுமாரனைப் போலக் கருவிகளால் மயங்கி நிற்கும் என்பதைக் குறிக்கின்றது.*

**14. இறைவன் வேடனாய் வந்ததும்; வேங்கை மரமானதும் எவற்றை உணர்த்துகின்றன?**

*இவ்வாறு மயங்கிக் கிடக்கும் உயிரினது இயல்பை இறைவனே எழுந்தருளி உணர்த்துகின்றான் என்பதை இவை விளக்குகின்றன. வேடனாய் வந்து அஞ்ஞானத்தினைப் போக்கியும், ஞான உணர்ச்சிக்குரிய அவாவினை எழுப்பியும் அடிமுதல் மறைகளாகவும், நடுப்பாகம் சிவநூல்களாகவும், கிளைகளனைத்தும் கலைகளாகவும் உடைய வேங்கை மரத்தோற்றத்தால் ஞானத்தினை நல்கியும் அருள் செய்கின்றான் என்க.*

**15. முருகன் கிழவனாய்த் தோன்றியதேன்?**

*இறைவன் உயிர்களுக்குக் குருவாகவும் எழுந்தருளித் தீக்ஷை கொடுத்து மலத்தினை அகற்றுவான் என்பதை இஃது உணர்த்து கின்றது.*

**16. முருகன் யானையை வரவழைத்ததேன்?**

*இறைவனே குருவாய்த் தோன்றி உபதேசமும் கொடுப்பான் என்பதை இஃது உணர்த்தும். யானை இறைவனது ஓங்காரப் பிரணவ சொரூபமாகும்.*

**17. யானையைக் கண்ட வள்ளிநாயகி முருகனைப் பற்றிக் கொண்டது எதனைக் உணர்த்தும்?**

*தன் சிறப்பியல்புணர்ந்து உபதேசம் பெற்ற உயிர், கருவிகளை நீங்கிச் சிவத்தை நாடிச்சென்றடையும் என்பதை உணர்த்துகின்றது.*

**18. வள்ளிநாயகி முருகனது மனைவியானது எதனை உணர்த்தும்?**

*இறைவனை உணர்ந்து அவனது அன்பிற்குப் பாத்திரமான உயிர் அவனோடு இரண்டறக் கலக்கும் என்பதை உணர்த்தும்.*

**123. முருகன் வீற்றிருந்தருளும் விசேடத் திருத்தலங்கள் யாவை?**

*திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம் அல்லது குமாரகோவில், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்ற ஆறுபடை வீடுகளுமாம்.*

**19. முருகனுடைய மறுபெயர்கள் யாவை?**

*இவருக்குக் 'குகன்' என்ற ஒரு பெயருண்டு. இப்பெயர் மலைக்குகையில் வசிப்பவன் என்று பொருள்படினும் அன்பர்களது*

உள்ளமாகிய குகைகளில் உறைபவன் எனவும் பொருள்படும். ''சுப்பிரமணியன்'' என்ற பெயர் சுத்தப் பிரமத்தினின்றும் தோன்றிய மணி போன்றவன் என்று பொருள்படும். ''குமாரன்'' என்ற பெயர் அழகில் மன்மதனை வென்ற எனப்பொருள்படும். ''கந்தன்'' என்ற பெயர் உமாதேவியாரால் சேர்க்கப் பட்டவன் என்றும் நறுமணத்தினை யுடையவனாயும் நமக்குத் தருபவனாயும் இருக்கின்றான் என்றும் பொருள்படும்.''சச்சிதானந்தன்'' என்ற பெயர் சத்தும் சித்தும் சேர்ந்தவழிப் பிறக்கும் ஆனந்தத்தினை நிகர்த்தவன் என்று பொருள்படும். இவருக்கு வேலாயுதன், சண்முகன் முதலிய வேறுபல பெயர்களும் உண்டு. இத்தகைய பெருமை வாய்ந்த கலியுகவரதனாம் கந்தக் கடவுளின் கழலிணை போற்றிக் கடைத்தேறுவோமாக.

## 13. ஆன்மாக்கள்

1. **ஆன்மாக்களது இயல்பு என்ன?**

எல்லாம் வல்ல இறைவனால் படைப்பிக்கப்பட்டு ஓர் உடம்போடுகூடித் தாம் செய்த வினைகளுக்கேற்ப அநுபவம் உடையவராய், சிற்றறிவினால் சிற்றின்பங்களை நுகர்பவராய் தமக்கொரு கடவுளை உடையவராய் இருக்கும் இயல்பினரே உயிர்களாகிய ஆன்மாக்களாவர்.

2. ஆன்மாக்கள் எடுக்கும் உடம்பு தூல உடம்பு, சூக்கும உடம்பு என இரண்டு வகைப்படும்.

3. தூல உடம்பாவது பஞ்ச பூதங்கள் கூடிப் பரிணமித்த உடம்பாம்.

4. சூக்கும உடம்பாவது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் சேர்ந்து ஆன்மாக்கள் உலக போகங்களை அநுபவிப்பதற்குக் கருவியாய் நின்று மரணகாலத்தில் தூல உடம்பைவிட்டுப் பிரியும் அரூப உடம்புக்கு சூக்கும உடம்பு என்று பெயர்.

5. உயிர்களின் தோற்ற வகை முட்டையிலே பிறக்கும் அண்டசம்; வியர்வையிலே பிறக்கும் சுவேதசம்; வித்து, வேர், தடி, கொடி, கிழங்கு இவற்றில் பிறக்கும் உத்பிசம்; கருப்பையிலே பிறக்கும் சராயுசம் என்னும் நான்குமாம்.

6. **மரணத்தின் பின்னுள்ள மனிதர் நிலை யாது?**

நல்வினை செய்த உயிர்கள் தூல தேகம் கழிந்தபின் தெய்வீக உடம்போடு உயர்த்தப்படுகின்றன; அவை மேல் உலகங்களிலே சென்று இன்பம் அனுபவிக்கின்றன. பாவம் செய்த உயிர்கள் பாவ சரீரத்தோடு தாழ்த்தப்பட்டு நரகம் முதலிய கீழ் உலகங்களிற் சென்று துன்பத்தை அடைகின்றன.

7. **சுவர்க்க நரகங்களுக்குச் சென்ற உயிர்கள் என்ன செய்கின்றன?**

சுவர்க்கத்திற்குச் சென்ற உயிர்கள் தாம் செய்த நல்வினைக்குத் தக்க இன்பம் அநுபவித்துத் திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து உயர்ந்த பிறவிகளையெடுத்து வாழ்கின்றன. நரகத்திற்குச் சென்ற உயிர்கள் தாம் செய்த தீவினைக்குத்தக்க துன்பம் அநுபவித்துத் திரும்பவும் இவ்உலகிற்குவந்து இழிந்த பிறப்புக்கள் எடுக்கின்றன. இவ்வுலகிலே ஒருடம்பு விட்டு வேறு உடம்பு எடுப்பனவும் பாவ புண்ணியங்களற்று முத்தியைப் பெறும் உயிர்களும் உள்ளன.

8. எழுவகைப் பிறப்புகள் தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவையாம்.

9. **மனிதப் பிறப்பின் மாண்பு யாது?**

உண்பதாலும், உறங்குவதாலும், மக்களைப் பெறுவதாலும், பேசுவதாலும், பகுத்தறிவுடைமையாலும் மனிதப் பிறவி மாண்பு உடையதாகாது; ஏனெனில் இவை மற்றைய பிறவிகளுக்கும் இருக்கின்றன. பின், மனித ஜன்மம் எக்காரணம் பற்றி மாட்சிமை யுடையது எனின், ★சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய மார்க்கங்களால் இறைவனை உணர்ந்து வழிபட்டு மோட்சத்தை அடைதற்குரிய இறைஞானம் மனிதர்க்குக் கிடைப்பது போல் மற்றவற்றிற்குக் கிடைக்காது. ஆகையால் மனிதப் பிறவியே எல்லாப் பிறவிகளிலும் மாட்சிமையுடையதாயிற்று. ஆதலால் மனிதராய்ப் பிறந்த எவரும் மோட்ச மார்க்கத்திற்குரிய நெறிகளைக் கடைபிடித்து ஒழுகுதற்குரியர்; இலரேல், விலங்குகள் முதலிய உயிர்களிலிருந்து இவர் சிறிதும் வேற்றுமையுடையர் அல்லர் என்பது விளங்கும்.

---

★ சரியை, கிரியை, யோக ஞானங்களை ஐந்தாம் பாடத்திற் கண்டுகொள்க.

# 14. சைவசமயச் சின்னங்கள்

1. சைவசமய அடையாளமாக உடலில் அணிந்து கொள்பவை விபூதி, உருத்திராக்கம், சந்தனம் முதலியனவாம்.

## விபூதி

2. விபூதி என்பது புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை அக்னியால் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம்.

3. விபூதியை வைத்துக் கொள்வது புதுத் துணியால் வடிகட்டி மணமுள்ள புஷ்பங்களையிட்டு புதுப்பானையில் வைத்துக் கொண்டு அவசியத்துக்கு தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**4. விபூதி அணிவதின் அவசியம் என்ன?**

*அசுத்தங்களை சாணம் அகற்றுவது யாவரும் கண்டறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும், சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்தோஷம், தலைவலி முதலிய வற்றை அகற்றவும் இது பயன்படுகிறது.*

*அன்றியும் இத்திருநீறு ''முடிவில் யாவரும் ஒரு பிடி சாம்பராவர்'' என்ற உண்மையை நமக்கு உணர்த்தி, ''நீயும் இத்தகைய நீராய்ச் சிறிது காலத்திற்குள் முடிவாய்; ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்'' என நம்மை எச்சரிக்கின்றது. பசுவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும், ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுத்தலின் நமக்கு இது இன்றியமையாததாகும்.*

**5. விபூதியைத் தரிப்பது எப்படி?**

*வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் நின்று பூமியில் விபூதி சிந்தாதபடி மூன்று விரல்களால் எடுத்து அன்னாந்து 'சிவசிவ' என்று சொல்லி சிவனைத் தியானித்து பூசுதல் வேண்டும்.*

**6. எப்போதெல்லாம் விபூதி அணிதல் வேண்டும்?**

*காலை மாலைகளிலும், குளித்தவுடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் அணிதல் வேண்டும்.*

**7. விபூதியை நீரில் குழைத்துப் பூசுவது எங்ஙனம்?**

*சமயதீக்ஷை முறைப்படி விபூதி தரிப்பதுதான் தகுதியுடையது. எனினும் தீக்ஷை பெற்றுக்கொள்ளும் வரை விபூதியை தண்ணீரிலே குழைத்து,*

*''ஈசான மூர்த்தியே நம:'' என்று சொல்லிச் சிரசிலும்,*

*''தத்புருஷ வக்த்ராய நம:'' என்று சொல்லி நெற்றியிலும்,*

*''அகோர ஹிருதயாய நம:'' என்று சொல்லி மார்பிலும்,*

*''வாமதேவ குஹ்யாய நம:'' என்று சொல்லி கொப்புழிலும்,*

*''ஸத்யோஜாத மூர்த்தியே நம:'' என்று சொல்லி புஜங்களிலும்,*

*கைமூட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும், கால் மூட்டுகளிலும் கழுத்திலும் தரித்துக் கொள்ளல் வேண்டும்.*

**8. விபூதி பூசியபின் யாது செய்தல் வேண்டும்?**

*சிவதீக்ஷை பெற்றவர்கள் குரு உபதேசித்தபடி ஸ்ரீபஞ்சாட்சர மந்திரத்தினை பலமுறை ஜபித்துக் கடவுளை வணங்கல் வேண்டும்.*

### உருத்திராட்சம்

9. **உருத்திராக்ஷம் என்றால் என்ன?**

*சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்து கொள்ளும் மணிக்கு உருத்திராக்ஷம் என்று பெயர்.*

10. **உருத்திராக்ஷத்தின் பெருமைகள் யாவை?**

*நல்ல உருத்திராக்ஷத்தை உறைத்துப் பார்த்தால் பசும்பொன்னின் மாற்றிருக்கக் காணலாம். இதனுள் மக்கள் உடலுக்கு நன்மை பயக்கும் சில பொருள்கள் இருக்கின்றன என்றும், இதனை உறைத்து மருந்தோடு கலந்து உட்கொண்டால் பல நன்மைகள் உண்டாகின்றன என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். இவற்றிலிருந்து உருத்திராக்ஷம் உடலுக்கு பல நன்மைகள் பயக்கின்றது என்று விளங்குகின்றது. உருத்திராக்ஷத்திற்பட்டு உடலிற் பாயும் நீர் மிகவும் புனிதமானது.*

''இலங்குமாமணி உருத்திர அக்கம் ஒன்றணியில்
விலங்கெயிற்று வெம்பூதங்கள் முதலிய மேவா''

*என்றபடி உருத்திராக்ஷம் அணிபவரை எவ்வித உபாதைகளும் வந்தடைய மாட்டா.*

11. **உருத்திராக்ஷத்தில் எத்தனை வகையுண்டு?**

*ஒரு முகமணி முதல் பதினாறு முகமணி வரையுண்டு.* **(உருத்திராக்ஷம் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள உருத்திராக்க விசிட்டம், ஆறுமுக நாவலரின் சைவ சமயநெறி நூலின் உரை, சைவ வினா விடை 1, 2 புத்தகங்களைப் பார்க்கவும்)**

12. **சந்தனம் அணிவதேன்?**

*சந்தனம் மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும். அது உடலிலுள்ள வெப்பத்தை நீக்கி, தன்மையைத் தந்து உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது. பல நரம்புகள் புருவமத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்க குளிர்ச்சியுடைய சுகந்தத் திலகம் அணிதல் வேண்டும். பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டு வதற்கும் அடியார்கள் திலகம் அணிந்து கொள்கின்றனர்.*

## 15. ஒழுக்கமுடைமை

1. **சைவசமயத்தினர் கைக்கொண்டொழுக வேண்டிய நல்லொழுக்கங்கள் எவை?**

*வாய்மை, கொல்லாமை, களவுசெய்யாமை, கள் குடியாமை, விபச்சாரம் செய்யாமை, இனியவை கூறல், செய்நன்றியறிதல்,*

பொறையுடைமை, புறங்கூறாமை முதலியவையாம். இவற்றின் விரிவை திருக்குறள் முதலிய நீதி நூல்களில் காண்க.

2. **தீயொழுக்கத்தால் எய்தும் தீமைகள் யாவை?**

உயிர்கள் தீயொழுக்கத்தால் பாவிகளாகி நரகத் துன்பங்கள் அனுபவித்து மேலும் மேலும் பல இழிந்த பிறப்புக்களையெடுத்துத் துன்புறும். ஆகையால் தீயொழுக்கம் தீயினும் அஞ்சத் தகுந்ததாகும்.

3. **நல்லொழுக்கத்தின் அவசியம் யாது?**

நீர் முதலியவற்றால் புறச்சுத்தம் உண்டாகின்றதுபோல் நல்லொழுக்கங்களால் அகச்சுத்தம் உண்டாகின்றது. புறச்சுத்தமும் அகச்சுத்தமும் உடையவர்களே இறை வணக்கத்துக்குரியவர் ஆவர். இம்மூன்று தன்மை யுடையவரே இறையருள் பெறுவர். ஆகையால், இம்மூன்றனுள்ளும் நடுநின்ற நல்லொழுக்கமுடைமை இன்றியமை யாத தாகும். எனவே எவ்வளவு புறச்சுத்தம் உடையவராயினும், எவ்வளவு சமயச்சின்னங்களை அணிந்தவராயினும் நல்லொழுக்கம் இல்லாதவரானால் இறையருள் பெறமுடியாதவராய் அழிவர் என்பது பெறப்படும்.

# 16. ஆலய பூஜை விளக்கம்

1. **பூஜை என்பதன் பொருளென்ன?**

பூஜை என்பதற்கு ஞானத்தை உண்டாக்கக்கூடிய சாதனம் என்பது பொருள். பூ-பூர்த்தி, நிறைவு; ஜா-தோன்றுதல். வினைகள் பூர்த்தியாகி ஞானம் தோன்றும் இடமே பூஜா எனப்படும்.

2. **பூஜை எத்தனை வகைப்படும்?**

ஆன்மார்த்த பூஜை அல்லது தான் உய்வதற்காகச் செய்யும் பூஜை எனவும், பரார்த்த பூஜை அல்லது பிறர் உய்வதற்குச் செய்யும் பூஜை எனவும் இருவகைப்படும்.

3. ஆன்மார்த்தமாவது தீக்ஷை பெற்று குருஉபதேசப்படி தனது நன்மையைக் கருதி செய்து வரும் பூஜையாம்.

4. **பரார்த்தமாவது யாது?**

பரார்த்தமாவது உலகினர் வணங்கி கடைத்தேறுவதற்காகத் தேவர்கள், ரிஷிகள், அரசர்கள் முதலியவர்களால் தாபிக்கப்பட்ட ஆலயங்களில் பூஜித்து வருவதாம்.

5. **பூஜை செய்வதற்குமுன் செய்ய வேண்டியது யாது?**

ஆன்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி ஆகிய பஞ்ச சுத்திகளையும் செய்தல் வேண்டும்.

6. **இப்பஞ்சசுத்தியின் அவசியமென்ன?**

*இத்தகைய ஐந்துவித சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்னும் ஐவகைப் பாசங்களையும் களைதல் என்னும் கருத்துப் பற்றியேயாம். இதனை,*

''பஞ்சவித சுத்தியினை பண்ணிடுக பாங்காக
பஞ்சவித பாசமறுப்பார்''

*என்னும் சைவசமயநெறிச் செய்யுளால் அறிக.*

7. **அபிஷேகப் பொருள்கள் எவை?**

*வடித்தெடுத்த நீர், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், இளநீர், பன்னீர், எண்ணெய், பால், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், கலபம், புஷ்பம் முதலியவையாம்.*

8. **அபிஷேகம் செய்யவேண்டிய அவசியமென்ன?**

*இதன் உண்மை ''அருளென்னும் புறவினையாட்டி'' என்று காசிக் காண்டத்தில் கூறியபடி திருவருள் ஞானமே நீரென பாவித்து அபிஷேகஞ்செய்யின் பல நிவாரணம் ஏற்படுமென்பதாம்.*

''தம்மிற் சிவலிங்கங் கண்டதனை தாம் வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டி''

*என்றபடி மருட்போதமே மலமாதலால் அம்மல அசுத்தத்தை அன்பெனும் அருள்நீர்க்கொண்டு சுத்தி செய்தல் என்னும் பாவனை யாம்.*

9. **திருவுருவங்களுக்கு ஆடை அணிவது திரோதன சக்தி தன் இயல்பு மாறி அருட்சக்தியாக மாறுதல் என்னும் பாவனை யாகும்.**

10. **பூஜையில் செய்யப்படும் உபச்சாரங்கள் யாவை?**

*பூஜையில் செய்யப்படும் உபச்சாரங்கள் பதினாறாம். அவையாவன: ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமநீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், ஜப சமர்ப்பணை, ஆராத்ரீகம் (தீபாராதனை) என்பனவாம்.*

11. *ஆவாஹனமாவது பூஜையின் பொருட்டுக் கடவுளை மூலமந்திரத்தைச் சொல்லி வரவழைத்து பூஜிக்கும் திருவுருவத்தில் விளங்கியிருக்கச் செய்தல் ஆவாஹனம் ஆகும்.*

12. *தாபனமாவது ''தயாநிதியே! அடியேனை அநுக்கிரகிப்பதற்காக விக்கிரகத்தில் பூஜை முடியும் வரையில் எழுந்தருளியிருக்க வேண்டும்'' என்று அன்புடன் யாசிப்பது தாபனமாகும்.*

13. **ஸந்நிதானம் என்பது யாது?**

*பூஜிக்கப்படுபவனாகிய கடவுள் அநுக்ரகிக்கும் தன்மையையும், பூஜிக்கின்றவனாகிய தான் அநுக்கிரகிக்கப்படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே ஸந்நிதானம் ஆகும். 'முதல்வன் ஆண்டவன்; தான் அடிமை' என்னும் உணர்வை நிலைபெறுவிப்பது.*

14. **ஸந்நிரோதனமாவது யாது?**

*'பகவானே! எப்போதும் என்னிடத்தில் அநுக்கிரகத்தோடு இருக்க வேண்டும்' என்று பிரார்த்திப்பதே ஸந்நிரோதனமாகும். முதல்வனுக்கும் தனக்குமுள்ள உறவு பிறர்க்குப் புலப்படாமைக் காத்தல்.*

15. **அவகுண்டனமாவது யாது?**

*சிவலிங்கத்தைச் சுற்றி கவச மந்திரத்தினால் மூன்றகழ் மூன்று மதில் உண்டானதாக பாவித்தல்.*

16. **தேனுமுத்திரை என்பது யாது?**

*கடவுளுக்கு முன்பாக பசுவின் மடிபோன்றதொரு முத்திரை காட்டுதலே தேனு முத்திரையாகும். தேவ அமுதத்தைப் பொழிவதாக எண்ணுதல்*

17. **பாத்தியமாவது யாது?**

*மூலமந்திரத்தை 'நம' என்னும் இறுதியையுடையதாக உச்சரித்து ஜலத்தை திருவடிகளில் சமர்ப்பித்தலாம்.*

18. **ஆசமநீயம் என்பது யாது?**

*மூலமந்திரத்தை 'ஸ்வதா' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஐந்து தடவை மும்மூன்றுதரம் ஜலத்தை திருவாயில் சமர்ப்பித்தலாம்.*

19. **அர்க்கியம் என்பது யாது?**

*மூலமந்திரத்தை உச்சரித்து கடவுளுடைய சிரங்களில் ஜலத்தை சமர்ப்பித்தலாம். இவை முறையே பாத தீர்த்தம், உண்ணுநீர், முடிக்கண் நீர் தெளித்தல் ஆகும்.*

20. **புஷ்பதானம் என்பது யாது?**

*மூலமந்திரத்தை உச்சரித்து புஷ்பங்களை முடியிற் சாத்துதல் புஷ்பதானமாகும்.*

21. *தூபமாவது கிரியா சக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்தில் இடுவது, ஆணவ மலமாகிய அறியாமையை கிரியா சக்தியைக்கொண்டு நீக்குதல் என்னும் குறிப்பினை உணர்த்துவதற்காகும்.*

22. **தீபமாவது யாது?**

*சிவபெருமானுக்கு தீபம் சமர்ப்பித்தலின் கருத்து சித்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குதல் என்பதாம்.*

23. *நைவேத்தியமாவது ஆன்ம குணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம் என்பவற்றையே அமுதாகச் சமர்ப்பித்தல் என்னும் பாவனையாகும்.*

24. *பாநீயம் என்பது வாசனை பொருந்திய தீர்த்தத்தை கடவுளுடைய திருப்திக்காக சமர்ப்பிப்பது.*

25. *ஜப சமர்ப்பணம் என்பது மூலமந்திரத்தை நூற்றியெட்டு உரு ஜெபித்து அதை கடவுளிடத்திலேயே ஒப்புவித்தால் அது ஜப சமர்ப்பணமாம்.*

26. **ஆராத்திரிகம் என்பது யாது?**

*அதாவது தீபாராதனை; பலவகையான தீபங்களை கடவுள் முன்பாகக் காட்டுதல். ஒவ்வொரு தீபத்திற்கும் ஒவ்வொரு கருத்துண்டு. அவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுகளும், குடமுமாம். இவற்றின் கருத்தாவது ஐந்து தட்டுகள் ஈசான முதலியவற்றையும் குடம் சாதாக்கிய தத்துவத்தையும் குறிக்கின்றமை யால் ஈசானம் முதலியன சாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன; அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றன என்பதாகும்.*

27. **கடைசியாகக் கற்பூரம் காட்டப்படுவதேன்?**

*கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்னி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றும் கரையப்பெற்று ஆகாயத்துடன் கலந்துவிடுவதுபோல், ஆன்மாவானது சத்துவ குணத்தை அடைந்து ஞானமாகிய அக்னியுடன் சம்பந்தம் பெற்று மூவகைச் சரீரங்களும் எல்லா பற்றுக்களும் நீங்கப் பெற்று பரமுக்தியடைதல் என்னும் பாவனையாம்.*

28. **அஷ்டபுஷ்பம் சாத்துதலின் கருத்தென்ன?**

*கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவையே கடவுளுக்குகந்த மலர்கள் என்னும் பாவனையாம்.*

29. **இவ்விஷயங்களை நாம் அறிந்து கொள்வதால் உண்டாகும் பயன் யாது?**

*இத்தகைய பூஜைகள் ஆலயங்களில் நடைபெறும் போது அவற்றின் கருத்தினை நாம் அறிந்து ஆராதனை செய்தாலொழிய*

*அவை நமக்கு எவ்வகைப் பயனையும் தாரா; ஆகையால் அவற்றின் பொருளை நாம் நன்கறிந்திருத்தல் வேண்டும்.*

# 17. திருவிழாத் தத்துவங்கள்

1. **திருவிழாவாவது யாது?**

*ஆலயங்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச் சிறப்பாக பூஜைகள் நடத்தி அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களை பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடத்துவிக்கும் விழாவுக்குத் திருவிழா என்று பெயர். இதனை மகோத்ஸவம் எனவும் கூறுவர்.*

2. **மகோத்ஸவம் என்பதன் பொருளென்ன?**

*மகா = பெரிய, உத் = உயர்வான, ஸவ = சிருஷ்டி முதலிய காரியங்கள், உயர்ந்த சிருஷ்டி முதலிய ஐந்தொழிலைக் குறிக்கும் குறி என்பதாம்.*

3. **திருவிழாக்கள் பல ஊர்களில் பலவிதமாக நடைபெறக் காரணமென்ன?**

*காரணாகமம், காமிகாகமம், வாதுளாகமம் முதலிய பல ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு விழாக்கள் நடைபெறு வதால் உத்ஸவங்களும் பலமாதிரியாக நடைபெறுகின்றன.*

4. **திருவிழா ஆரம்பிப்பதற்கு முந்திய நாள் மண்ணெடுப்பதும் முளையிடுவதும் எதைக் குறிக்கின்றன?**

*மண்ணைப் பதம் பண்ணி வித்திடுவது சிருஷ்டியைக் குறிக்கின்றது.*

5. **கொடியேற்றம் எவ்வாறு நடைபெறுகிறது?**

*ரிஷப உருவத்தை ஒரு துணியில் எழுதி அதற்குப் பூஜைகள் செய்து கயிற்றில் சுற்றிக் கொடிமரத்தில் உச்சிக்கு ஏற்றுவது கொடியேற்றமாம்.*

6. **கொடியேற்றலின் தத்துவம் யாது?**

*(அ) சமம், விகாரம், சந்தோஷம், சாதுசங்கமமாகிய நான்கு குணங்களையும் கால்களாக உடையது இடபம், அது வெள்ளைநிறம் பொருந்திய பரிசுத்த தரும தேவதை. அதனை ஒப்ப ஆன்மாக்கள் பரிசுத்தம் உடையவர்களாகி அந்நான்கு குணங்களையும் உடையவர் களானால், அவர்களை இறைவன் அவர்களிருக்கும் நிலையிலிருந்து மிக உயர்த்திவிடுவான் என்பதை இது குறிக்கின்றது.*

*(ஆ) திருவிழாவின் முதல் நாளில் இக்கொடி யேற்றுதலின் நோக்கமாவது, திருவிழாவிற்கு வரும் அடியார்களை உயர்ப்பதமடையச் செய்வதற்காக இறைவன் இவ்விழா நாட்களில் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்யப்போகின்றான் என்பதாம்.*

7. **விருக்ஷ வாகனத் தத்துவம் யாது?**

*இதை 'விருத்திக்கிரம சிருஷ்டி கோலம்' என்பர். மரத்தின் இலைகள் கிளைகள் முதலியன போல, தத்துவங்களாகவும், எண்ணிறந்த ஜீவராசிகளாகவும் கடவுள் விளங்குகிறார் என்பதை இது குறிக்கின்றது. மரத்தின் வேரில் பீடமிட்டு அதில் அம்மையப்பராகக் கடவுள் விளங்குகிறார். அஃதாவது, இத்தகைய சிருஷ்டிக்கெல்லாம் வேராக இருப்பது அருள் என்ற சக்தியோடு கூடிய அறிவு என்ற சிவமே என்பதாம். விருக்ஷம் சொற்பிரபஞ்சத்தையும் அதன் வழிப்படும் பொருள் உலகையும் குறிக்கும். வேர் மூலமாகிய பிரணவம்.*

8. **சூரியபிரபை, சந்திரபிரபைகளில் எழுந்தருளி வருவது எதைக் குறிக்கின்றது?**

*இது ''விருத்திக்கிரம ஸ்திதி கோலம்'' உலகத்திலுள்ள உயிர்கள் பிழைத்திருப்பதற்கு காரணம் சூரிய வெப்பம். அவ்வெப்பம் இல்லாவிடில் புசிப்பதற்குப் புல்லும் கிடைக்காது. அவ்வெப்பமே கடலில் நீரையுண்டு மேகங்கள் மூலமாய் மழையைத் தருவிக்கின்றது. இன்னும் எல்லா வகையான தொழில்களுக்கும் அது மூலசக்தியாய் விளங்குகின்றது. எனவே, உலகத்தைக் காப்பாற்றுவது சூரியனது தொழில். சந்திரன் இன்பத்தைத் தருபவன். ஆகையால் சூரியப் பிரபையிலும் சந்திரப்பிரபையிலும் இறைவனை வைத்து வணங்குதல் ஸ்திதி தொழிலுக்கு அறிகுறியாம்.*

9. **நந்தியின் மேலும் பூதவாகனத்தின் மேலும் இறைவன் எழுந்தருளி வருவது எதைக் குறிக்கின்றது?**

*மான், மழு, சதுர்ப்புஜம், திரிநேத்ரம் முதலிய அடையாளங் களையுடைய சாரூப்பிய பதவி பெற்ற விஞ்ஞானகலர் என்ற ஆன்ம வர்க்கத்துள் சிறந்தவர் அதிகாரநந்தி என்பவர். பூதகணங்களோ வெனின், இறந்தவுடன் ஆன்மாக்களைக் கொண்டு போகும் தொழிலையுடையன. இவ்விரண்டு வாகனங்களின் மேலும் இறைவன் ஏறிவருவது சங்காரத்திற்கு அறிகுறியாகும்.*

10. **நாகப்பாம்பு வாகனம் எதை உணர்த்துகின்றது?**

*நஞ்சு, மாணிக்கம், படமாகிய மூன்றையும் மறைத்து, வேண்டும் போது வெளிப்படுத்தும் திறமையுடையது பாம்பு. அல்லாமலும் இது, தானும் மறைந்திருந்து வேண்டும்போது புற்றிலிருந்து வெளிவரும்*

தொழிலுடையது. எனவே, நாகப்பாம்பு வாகனம் மறைத்தற் றொழிலாகிய 'திரோபவம்' என்பதற்கு அறிகுறியாகும். குண்டலி சக்தி சுழுமுனைநாடி முதலியவற்றோடு ஒப்பிட்டும் தத்துவம் கூறுவர்.

**11. ரிஷபவாகனக் காட்சி சிறந்த காட்சியானதேன்?**

சிவனடியார்களுக்கு இறைவன் ரிஷபவாகனா ரூடராகவே காட்சி கொடுத்திருக்கிறானென்று அறிகிறோம். ரிஷபம் எவ்வகையான மாசும் அற்றது. சுத்த வெள்ளை நிறமுடையது. சமம் முதலிய நான்கு குணங்களைக் கால்களாகவுடையது. ஆணவ மலத்தை ஒழித்து அருளொடு கூடிய அறிவைப் பணிவுடன் ஏற்று நிற்கின்றது. ஆன்மாக்கள் இங்ஙனம் ஆகும்போதுதான் இறைவன் பேரருள் சுரக்கிறான். ஆகையால், இக்காட்சி அநுக்ரக காட்சியாயிற்று; எனவே இது சிறந்ததாம்.

**12. ஆறாம் திருவிழாவில் இறைவன் யானை மீது வரும் காட்சியின் தத்துவம் என்ன?**

இது லயக்ரம (ஒடுங்கும் முறை) சிருஷ்டி கோலமாகும். மரம் சிருஷ்டியை உணர்த்துவதுபோல விரிந்த பாகுபாடுகளெல்லாம் ஒடுங்கி ஒரே பிண்டமாகப் பருமனான உடம்பு கால்களையுடைய யானையைப் போல் ஒடுங்கிவிடுவது லயக்கிரமத்தில் கடைசிப் படியாக வுள்ள சிருஷ்டியைக் குறிக்கிறது.

**13. கைலாச பர்வதவாகனம் எதை உணர்த்துகிறது?**

இராவணன் ஆணவமலம் நிறைந்த உயிர்; இமயமலை பிரபஞ்சம். இராவணன் இமயமலையைத் தூக்க முயல்வது, ஆணவம் பிரபஞ்சத்தை அறிந்து இன்புற முயல்வதற்கு உவமையாகின்றது. இராவணன் அவ்வாறு தூக்கமுடியாமல் துன்பமடைந்தான். அவ்வாறே ஆணவ மலம் நிறைந்த வுயிரும் இறுதியில் ஆணவத்தை இழந்து, கடவுளைத் தியானித்து, வரம்பெற்று, இறைவன் திருவடி சார்ந்து இன்புறுகிறது. இதனையே இவ்வாகனம் உணரச் செய்கிறது.

**14. நடராஜர் உற்சவத்தில் அடங்கிய தத்துவங்கள் எவை?**

நடராஜர் திருவுருவத்தில் பஞ்ச கிருத்தியங்கள் உள்ளனவென்பது ''தோற்றம் துடியதனில்'' என்ற பாடல் மூலம் விளங்கும். அதாவது, சிருஷ்டி உடுக்கையிலும் ஸ்திதி அபயஹஸ்தத்திலும், சங்காரம் எரிதாங்கிய கையிலும், துரோபவம் ஊன்றிய காலிலும், அநுக்கிரகம் தூக்கிய காலிலும் குறியீடாகவுள்ளனவென்று சிவஞான சாத்திரங்கள் கூறுகின்றன. இங்ஙனமே நடராஜர் உற்சவத்திலும் பஞ்சகிருத்தியங்கள் உள்ளன. சபையைவிட்டு புறப்படுதல் சிருஷ்டி; அபிஷேகம் ஸ்திதி சாந்தணிதலும், அலங்கார தீபாராதனையும், ஸம்ஹாரம்; வெள்ளைச் சாத்துபடி திரோபவம்; வீதிவலம் வந்து மட்டையடி தரிசனம் அநுக்ரகம்.

**15. தேரின் தத்துவங்கள் யாவை?**

தேரின் அமைப்பு அண்ட பிண்டத்திற்கு சமானம். விசுவவிராட் சொரூபமே எட்டு அடுக்குகளாகும். உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம்; அதற்கடுத்த கீழடுக்கு துவாதசாந்தம்; அதற்கடுத்தது மஸ்தக ஆதீஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ்தானம்; அதற்கடுத்தது புருவ மத்தியஸ்தானம்; நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள்; முன் மூன்று துறைகள் மூன்று கண்கள். பின்னவை சிகையும் இட வலக்காதுகளுமாகும்; இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடய பீடம் முப்பாழ்; குதிரைகள் சூரிய சந்திர கலைகள்; சாரதி அக்நிகலை; இவை நாசியாகும்; அடுத்த அடுக்கு கண்டஸ்தானம்; அதையடுத்த அடுக்கு இருதயஸ்தானம்; அதையடுத்த அடுக்கு நாபி; அதற்கடுத்த அடுக்கு குண்டலிஸ்தானம்; பத்துச்சக்கரங்களும் தசவாயுக்கள். இறைவன் இதற்கு கர்த்தாயொருவனே என்றுணர்த்தி இவ்வாறமைந்த பிண்ட தத்துவ சரீரமாகிய இரதத்தில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனதை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அதிலிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாயுக்கும் ஏற்றி லயப்படுத்தி, முறையே இரதக்குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண் வழியாகவும் நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவ மத்திக்கும் ஏற்றி லயப்பட்டு சும்மாயிருந்தபடியிருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற லயக்கிரமத்தைக் காட்டுகிறது. மேலும் தேர் திரிபுராதிகளை சிவன் சிரித்து எரித்து ஆன்ம கோடிகளைக் காப்பாற்றிய ஸ்திதி தொழிலுக்கும் அறிகுறியாகிறது.

**16. பிக்ஷாடனர் திருக்கோலம் எதை உணர்த்துகிறது?**

தாருகாவனத்து ரிஷிகளும், ரிஷி பத்தினிகளும் ஆணவமலத்தால் தாங்கள் சுதந்திரர்களென எண்ணிக் கடவுளை மறந்தனர். அவர்கள் பரதந்திரர்களென உணர்த்துதற் பொருட்டு இறைவன் பிக்ஷாடன மூர்த்தியாய்ச் செல்ல, ரிஷி பத்தினிகள் அவரழகில் ஈடுபட்டனர். இவ்விரண்டு செயல்களாலும் ரிஷிகளும், அவர் பத்தினிமார்களும் பரதந்திரர்களே என அவர்களை உணரச்செய்து பரமன் மறைந் தருளினான். இவ்வநுக்கிரக பராக்கிரமக் கோலமே பிக்ஷாடனக் கோலமாகும்.

**17. தீர்த்தவாரியின் கருத்தென்ன?**

இறைவனது அநுக்கிரகம் பெற்ற உயிர்கள் அவனது அருட் பெருக்கில் அமிழ்வதைக் குறிக்கின்றது. நீராடி ஆலயத்தினுள் சென்று வணங்குவது மோட்சம் அடைதலைக் குறிக்கின்றது. இத்தகையத் தத்துவங்களை பத்துநாள் விழாவிலும் எண்ணி எண்ணிப் பரமனைப் பரவுவார் பரகதியடைவார் என்பதற்கு ஐயமுளதோ?

# 18. ஆலய வழிபாடு செய்யும் முறை

1. ஆலயங்களுக்கு எவ்வாறு நாம் போக வேண்டும்?

*தேக சுத்திகள் செய்து நீராடி சமயச்சின்னங் களணிந்து தோய்த்துலர்ந்த ஆடை உடுத்திச் செல்லவேண்டும்.* **ஆலயங்களுக்கு வெறுங்கையுடன் செல்லாமல் தங்களால் இயன்ற வகை பூஜைப் பொருட்கள், அபிஷேகத் திரவியங்கள், பழங்கள் மற்றுமுள்ளவை அவசியம் எடுத்துச் செல்லல் வேண்டும்.** *கோயிலின் பக்கத்திற் சென்றதும் கை கால்களைக் கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன் சென்று நின்று இரண்டு கரங்களையும் தலைமேற் குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், அருட்பாக்களைப் பாடிக் கொண்டும் வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல், கோபுரத்தைத் தூல லிங்கமாகவும், கடவுள் பாதங்களாகவும், பாவித்து வணங்கிக் கோயிலுட் போகவேண்டும்.*

2. *திருக்கோயிலுட் செய்யத்தகாத செயல்கள் எவை?

*துப்புதல், மூக்குச்சிந்துதல், மலசலம் கழித்தல், தலைகட்டுதல், தலையில் சீலைக்கட்டிக்கொள்ளுதல், அபானவாயு விடுதல், சட்டை, தொப்பி, செருப்பு இவற்றை மாட்டிக்கொள்ளுதல், சுருட்டுக் குடித்தல், வம்பு பேசுதல், சிரித்தல், விளையாடுதல், சண்டையிடல், பலிபீடங்களின் நிழலை மிதித்தல், வெற்றிலை போடுதல், எச்சிலாக்குதல் ஆலயத்தில் பிரசாதமாகத் தரப்படும் விபூதி, குங்குமம் போன்றவைகளை அங்குள்ள தூண்களில் கொட்டி அசுத்தமாக்குதல் முதலியன செய்யத் தகாதனவாம்.*

3. கொடிமரத்தின் பக்கத்திற் சென்றதும் யாது செய்ய வேண்டும்?

*ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.*

4. அஷ்டாங்க நமஸ்காரமாவது யாது?

*தலை, செவியிரண்டு, கால்இரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க்கட்டை ஆகிய எட்டு அவயங்களும் பூமியிற்படியும்படி வணங்குதலாம்.*

5. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

*தலை, செவியிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி நமஸ்கரித்தலாம்.*

6. கொடிமரத்தைக் கண்டதும் யாது நினைத்தல் வேண்டும்?

*இறைவனையடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என நினைந்து கொடிமரத்தை சூக்கும லிங்கமாக எண்ணி வணங்கவேண்டும்.*

**7. கொடிமர தரிசனம் செய்தபிறகு யாது செய்தல் வேண்டும்?**

*மூலமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு மூன்றுதரம் வலம் வந்து வணங்கி உட்செல்லுவதற்காகப் பலிபீடத்தின் அருகிற் செல்ல வேண்டும்.*

**8. பலிபீடத்தின் அருகில் சென்று யாது செய்தல் வேண்டும்?**

*நம்மிடமிருக்கும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பனவற்றைப் பலிகொடுத்ததாக உறுதி பண்ண வேண்டும்.*

**9. பிரதக்ஷிணம் செய்யும்போது யாது நினைத்தல் வேண்டும்?**

*ஐந்து பிராகாரங்களையும் அன்னமயகோச முதலிய பஞ்சகோசங் களாக மதித்து ஒவ்வொரு கோசத்திலும் ஆன்மா உழன்று தெளிந்து அதைவிடுத்து மேலே செல்வதாக நினைக்க வேண்டும். இங்ஙனம் ஐந்து பிராகாரங்களையும் கடந்தால் கடவுளது சாமீப்யபதத்தை அடையலாம் என்னும் உண்மையையும் உணர்தல் வேண்டும்.*

**10. கோயிலில் விநாயகரது ஸ்தானம் கன்னிமூலை.**

**11. விநாயகர் சந்நிதியில் எப்படி வணங்கவேண்டும்?**

*வலக்கையை இடக்கையின் முன் வைத்து, வலக்கையால் இடப் புறத்திலும், இடக்கையால் வலப் புறத்திலும், நெற்றியின் இருமருங்கும் மூன்றுமுறை குட்டிக்கொண்டு, வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் கூறி வணங்குதல் வேண்டும்.*

**12. இவரை ஏன் இவ்வாறு வணங்குதல் வேண்டும்?**

*ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை தானே விதித்துத் தானே அனுபவித்தல் போலக் கடவுளின் சமீபத்தில் செல்வதற்குத் தகுதியில்லாதபடி குற்றங்கள் நிறைந்த மக்கள் தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனைகள் செய்துகொண்டு அனுபவிக்க மேற் கூறியவாறு செய்து, மேல் அவ்விதம் குற்றங்கள் செய்யமாட்டோம் என உறுதி செய்துகொள்ளுகிறார்கள். கடவுளின் அருள் கிடைப்பதற்கு விக்கினங்கள் ஏற்படுமானால் விக்கினங்களை நீக்கியருள வேண்டும் எனவும் விக்கினேசுவரரை வணங்குகிறார்கள்.*

**13. இவர்முன் தேங்காய் விடலை எறிவதேன்?**

*நாம் செய்த குற்றங்கள் பாவங்களாக உருண்டு திரண்டு உருக்கொண்டு நிற்கின்றதாகத் தேங்காயைப் பாவித்து, அது விநாயகர் வணக்கத்தால் உடைந்து சிதறினது என்று நினைந்து விடலையெறிந்து மேல் அவ்வகைப் பாவங்கள் செய்யாதிருப்போம் என நினைந்து கொள்ளுதற்காம்.*

**14. விநாயகர் வணக்கம் முடிந்தபின் யாது செய்தல் வேண்டும்?**

*துவார பாலகர்களின் முன்னே சென்று, ''அடியேன் உட்சென்று இறைவனை வணங்குதற்கு அனுமதி செய்தருளும்'' என்று வேண்டிக் கொண்டு சந்நிதியிற் சென்று நின்று இறைவனை வணங்கித் தோத்திரப் பாக்கள் கூறுதல் வேண்டும். இங்குத் தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருள்களைக் கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம்; அருச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கி தரித்துக்கொண்டு மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில் பதிய வைத்து எலும்புகளெல்லாம் நெக்கு நெக்குருகக் கண்ணீர் அருவிபோல பாயக் கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். பின் அம்பிகை சந்நிதியிலும் அவ்வாறே வணங்கல் வேண்டும்.*

**15. அதன்பின் யாது செய்தல் வேண்டும்?**

*உட்பிராகாரங்களிலிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வரல் வேண்டும்.*

**16. தட்சிணாமூர்த்தி முன் எவ்வாறு வணங்க வேண்டும்?**

*தட்க்ஷிணாமூர்த்தி கல்லாலின்கீழ், சனகர் முதலிய நால்வருக்கு உபதேசஞ்செய்ய எழுந்தருளிய குருமூர்த்தமாகும். அவர் தம் சுட்டு விரலை பெருவிரலோடு சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் அகலவிட்டுக் காட்டும் சின்முத்திரையால் உயிர்கள் ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்றினையும் அகற்றி கடவுளையடைதல் வேண்டும் என உபதேசிக் கின்றார். ஆதலால், அவர் சந்நிதியடைந்த நாம் இறைவனை குருவாய் பாவித்து வணங்கவேண்டும். அவர் உபதேசிக்கின்றபடி ஆணவம், கன்மம், மாயைகளை அகற்றி இறைவனையடைய முயலுதல் வேண்டும்.*

**17. சண்டேசுவரரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?**

*சண்டேசுவரர் கோயில், கோயிலின் இடப்பக்கத்தில் சிறியதோர் இடைவெளிவிட்டு அமைக்கப்பட்டிருக்கும். மூலஸ்தானத்தில் சாத்திய மாலையும், நைவேத்திய மிச்சமுமே இங்கு பூஜைக்குரியன. இவர் கடவுள் திருவருள் பெற்ற அடியார். இவர் எப்போதும் சிவதியானம் செய்துகொண்டே இருக்கிறார். இவரை கோயில் தரிசனம் அனைத்தும் முடிந்தபிறகு வணங்குதல் வேண்டும். சிவதியானத்தில் இருக்கும் இவரை நம்மை நோக்குதற் பொருட்டு மூன்றுமுறை கையால்கொட்டி அவர் நம்மை பார்ப்பதாய் மதித்துச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும்.*

**18. கோயில் வழிபாடனைத்தும் முடிந்தபிறகு யாது செய்தல் வேண்டும்?**

*கொடிமரத்திற்குச் சற்றுதூரம் விலகியிருந்து மூலமந்திரத்தை நூற்றெட்டு முறையோ அதற்கு மேற்படவோ ஜபித்து, தாங்கண்ட இறைவன் திருவுருவத்தை நினைந்து, எங்குச் சென்றிருந்து தியானிப்பினும் புறக்கண்ணால் கண்ட திருவுருவம் அகக்கண்ணால் காணும்படி ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும்.*

# 19. அறுபத்து மூவர்

தத்துமூ தெயில் மூன்றும் தழலெழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர்அறு
பத்துமூவர் பதமலர் போற்று வாம்.

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சிந்தாந்த வழிதேறி அதீத வாழ்விற்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும் பொருளாகக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு நான்பெற் றேனால்.
- *காஞ்சிப்புராணம்*

*உலகத்திலுள்ள எல்லாச்சமயங்களிலுமுள்ள பொது உண்மை களையும் சிறப்பொழுக்கங்களையும் சைவசமயம் தன்னிடத்தே ஏணிப்படிகள் போலக்கொண்டு அவற்றிற்கு மேம்பட்ட அதீத நிலையிலிருக்கிறது. இதனால் ''சைவத்தின் மேற்சமயம் வேறிலை'' என்றும் ''சைவ சமயமே சமயம்'' என்றும் பெரியோர்கள் இதனைப் பாராட்டியுள்ளார்கள். இவ்வதீத வாழ்க்கையை நடத்திச் சைவத்தின் பெருமையை நிலைநாட்டியவர்களே அறுபத்து மூவர். இவர் களுடைய திருமேனிகளைத் திருக்கோயில்களில் வைத்து வழிபடுவதன் முக்கிய நோக்கம் இவர்களுடைய வாழ்க்கையை நினைவில் வைத்து இவர்களைப் போலவே நாமும் இயன்ற வரையில் நடக்கவேண்டுமென்பதே.*

*அறுபத்துமூவர் பல்வேறு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் ஆதிசைவர் முதல் ஆதி திராவிடர் ஈறாகக் கூறப்படும் பல குலங்களில் தோன்றிச் சிவபெருமானிடத்திலும் சிவனடியார் களிடத்திலும் அளவு கடந்த அன்புடையராக வாழ்ந்தவர்கள். இவர்களுட் பெரும்பான்மையோர் இல்லறம் நடத்தியவர்கள்; சிலர் இளைஞர்; மூவர் பெண்மணிகள். இவர்கள் தாம் பூசுகின்ற திருநீற்றைப் போலவே கள்ளங்கபடமற்ற வெண்மையான பரிசுத்த உள்ளம் உடையவர்கள். தாம் அணிகின்ற உருத்திராக்கம் நினைவூட்டுகின்ற இரக்கம் மிகுதியுமுடைய ஈர அன்பினர். பூகம்பம் போன்ற எவ்விதமான பெருந் துன்பத்துக்கும் அஞ்சாததீரர்கள். செல்வ நிலையில் மட்டும் கடவுளை நிந்திக்கும் மூடர்களைப்போலன்றி எப்போதும் கலங்காத மனமுடையவர்கள். நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் துயின்றாலும் விழித்தாலும் எக்காலத்தும் கடவுளை மறவாதவர்கள். அரனையும் அடியவரையும் பணிந்துருகிப் பேசின வாய் தழுதழுப்பக், கண்ணீர் வெள்ளம் பாய, மயிர்சிலிர்ப்பக் கூசியே உடல் தம்பித்திடும் பக்த சிகாமணிகள். தமக்கென விரும்பி வீடுபேற்றையும் வேண்டிக் கேட்காத தன்முனைப்பற்ற வீரர்கள்.*

## அறுபத்து மூவர்
## பெயர், குலம், நாடு, ஊர், தொண்டு விவரங்கள்

1. **திருநீலகண்ட நாயனார் :** குயவர், சோழநாடு. சிதம்பரம் அயலறியாவண்ணம், மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப்பின் திருவருளால் இளமைப் பருவம் பெற்றவர்.

2. **இயற்பகை நாயனார்** : வணிகர், சோழநாடு, காவிரிப் பூம்பட்டினம்-சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தவர்.

3. **இளையான்குடிமாற நாயனார் :** வேளாளர், இளையான்குடி-விதைத்த நெல்லெடுத்து வீட்டின் அலக்கெரித்து அடியார்க்கு அமுதளித்தவர்.

4. **மெய்ப்பொருள் நாயனார் :** குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவிலூர்-வஞ்சித்துத் தம்மைக்கொல்லும் சிவவேடதாரியைக் காப்பாற்றித் தாம் உயிர்விட்டவர்.

5. **விறன்மிண்ட நாயனார் :** வேளாளர், மலைநாடு, செங்குன்றூர்-சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணமாயிருந்தவர்.

6. **அமர்நீதி நாயனார் :** வணிகர், சோழநாடு, பழையாறை-கோவணத்துக்கு நிறையாக மனைவி மக்கள் சொத்துக்களுடன் தம்மையும் சிவனடியார்க்குத் தந்தவர்.

7. **எறிபத்த நாயனார்** : சோழநாடு, கருவூர்- பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டியவர்.

8. **ஏனாதிநாத நாயனார் :** சான்றார், சோழநாடு, எயினனூர்-போர்புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனாற் கொல்லப்படும்படி நடந்து கொண்டவர்.

9. **கண்ணப்ப நாயனார் :** வேடர், தொண்டை நாடு, உடுப்பூர்-ஆறேநாளில் அளவுகடந்த பக்திசெய்து காளத்தியப்பருக்குக் கண் அப்பியவர்.

10. **குங்குலியக்கலய நாயனார் :** அந்தணர், சோழநாடு, திருக்கடவூர்-மனைவியின் தாலியை விற்று குங்குலியம் வாங்கியவர். சாய்ந்த இலிங்கத்தைக் கழுத்தில் பூமாலை கொண்டு நிமிர்த்தியவர்.

**11. மானக்கஞ்சாற நாயனார் :** *வேளாளர்-கஞ்சாறூர் - திருமணம் தொடங்கும்போது மணப்பெண்ணாகிய தமது மகளின் தலைமயிரை அறுத்துச் சிவனடியாருக்குத் தந்தவர்.*

**12. அரிவாட்டாய நாயனார் :** *வேளாளர், சோழநாடு கணமங்கலம் - சிவநிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தையரிந்தவர்.*

**13. ஆனாய நாயனார் :** *இடையர், மழநாடு மங்கலவூர் - பசு மேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தவர்.*

**14. மூர்த்தி நாயனார் :** *வணிகர், பாண்டியநாடு, மதுரை-சந்தனம் தருகிற திருப்பணியில் முட்டுப்பாடு நேரவே முழங்கையை அரைத்தவர். திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மும்மையால் உலகாண்டவர்.*

**15. முருக நாயனார் :** *அந்தணர், சோழநாடு, திருப்புகலூர்-பூத்தொண்டு செய்து திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றவர்.*

**16. உருத்திரபசுபதி நாயனார் :** *அந்தணர், சோழநாடு, திருத்தலையூர் - அல்லும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீ ருத்திர மந்திரம் ஜெபித்தவர்.*

**17. திருநாளைப்போவார் நாயனார் :** *(நந்தனார்) புலையர், சோழநாடு, ஆதனூர் - தில்லையைக் காண விரும்பி தீப்புகுந்து முனிவராயெழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தவர்.*

**18. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் :** *ஏகாலியர், தொண்டை நாடு, காஞ்சிபுரம் - சிவனடியாருக்கு வாக்களித்தபடி துணியைத் தோய்த்துலர்த்தித்தர முடியாமற்போனபடியால் தமது தலையைக் கல்லின்மீது மோதிக்கொண்டவர்.*

**19. சண்டேசுவர நாயனார் :** *அந்தணர், சோழநாடு, திருச்சேய்ஞலூர் - அபிஷேகப் பாற்குடத்தை இடறிய தந்தையின் காலை வெட்டித் தொண்டர்க்கு நாயகம் பெற்றவர்.*

**20. திருநாவுக்கரசு சுவாமிகள் :** *வேளாளர், நடுநாடு, திருவாமூர் - ஐந்தெழுத்தோதிக் கருங்கல்லின் மேல் கடலில் மிதந்து கரையேறிப்பல தேவாரங்கள் பாடிக் கைத்தொண்டு செய்து முத்தியடைந்தவர்.*

**21. குலச்சிறை நாயனார் :** *பாண்டியநாடு, மணமேற்குடி - அரசன் சமணனாயிருந்தபோதும் தாம் சிவனடியாரை வழிபட்டவர். திருஞானசம்பந்தரை அழைத்துவந்து அரசனையும் நாட்டினையும் சைவமாக்கியவர்.*

22. **பெருமிழலைக்குறும்ப நாயனார் :** பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு அவர் கயிலை செல்லுதலறிந்து யோகத்தால் தாமும் கயிலை சென்றவர்.

23. **காரைக்காலம்மையார் :** (பேயார்) வணிகர், சோழநாடு காரைக்கால் - சிவபெருமானை வேண்டி மாம்பழமும் பேய் வடிவும் பெற்றவர். ஆலங்காட்டில் ஆடல் கண்டவர்.

24. **அப்பூதியடிகள் நாயனார் :** அந்தணர், சோழநாடு திங்களூர் - பிள்ளை இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்தவர்.

25. **திருநீலநக்க நாயனார் :** அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை - அன்போடு சிவலிங்கத்தை ஊதித்துதித்தல் அனுசிதமன்றெனக் காட்டப்பெற்றவர். பாணர்க்கு வேதிகையில் இடந்தந்தவர். திருஞானசம்பந்தர் திருமணத்தை நடத்தி முத்தி பெற்றவர்.

26. **நமிநந்தியடிகள் நாயனார் :** அந்தணர், சோழநாடு, ஏமப்பேறூர் - தண்ணீரால் விளக்கெரித்தவர், திருவாரூர்ப் பிறந்தாரையெல்லாம் சிவசாரூப்பியராகக் கண்டவர்.

27. **திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் :** அந்தணர், சோழநாடு, சீகாழி - உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்றவர். தேவாரம்பாடி எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் செய்து, தமது திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவருக்கும் முத்தி தந்தவர்.

28. **ஏயர்கோன் கலிக்காம நாயனார் :** வேளாளர், சோழநாடு, திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாக விடுவித்த வன்றொண்டரை, இகழ்ந்துபின்பு திருவருள் விளையாட்டால் அவருடைய நண்பரானவர்.

29. **திருமூல நாயனார் :** இடையர், சோழநாடு, சாத்தனூர் - மூலன் உடலில் தாம் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச்செய்தவர்.

30. **தண்டியடிகள் நாயனார் :** சோழநாடு, திருவாரூர் - பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப்பணி செய்து குருடு நீங்கிச் சமணரை வென்றவர்.

31. **மூர்க்க நாயனார் :** வேளாளர், தொண்டை நாடு, திருவேற்காடு - சூதாட்டத்தாற் கிடைக்கும் லாபம் கொண்டு சிவனடியாரை வழிப்பட்டவர்.

32. **சோமாசிமாற நாயனார் :** அந்தணர், சோழநாடு, திருஅம்பர் - வேதவேள்வி செய்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர்.

**33. சாக்கிய நாயனார் :** *வேளாளர், திருச்சங்கமங்கை மறவாது நாடோறும் சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபட்டவர்.*

**34. சிறப்புலி நாயனார் :** *அந்தணர், சோழநாடு, திருஆக்கூர்- அமுதும் பொருளும் தந்தவர்.*

**35. சிறுத்தொண்ட நாயனார் :** *மாமாத்திரப்பிராமணர், சோழநாடு, திருச்செங்காட்டங்குடி, வாதாபிப்போர் வென்றவர். சிவனடியார்க்குத் தமது ஒரேபிள்ளையைக் கறியாகச் சமைத்து வைத்தவர்.*

**36. கழறிற்றறிவார் நாயனார் :** *(சேரமான் பெருமாள்) அரசர், மலைநாடு, கொடுங்கோளூர் நடராசர் பாதச் சிலம்பொலி கேட்கத் தாழ்த்தமையால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோழமைபெற்றவர். சிவபெருமானுடைய திருமுகப்பாசுரம் பெற்றவர். கயிலைசென்று ஞானவுலா பாடியவர்.*

**37. கணநாத நாயனார் :** *அந்தணர், சோழநாடு, சீகாழி- திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சி தந்தவர்.*

**38. கூற்றுவ நாயனார் :** *குறுநிலமன்னர், களந்தை - தில்லைவாழந்தணர் தமக்கு முடிசூட்ட மறுக்கவே தில்லையம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப் பெற்றவர்.*

**39.புகழ்ச்சோழ நாயனார் :** *அரசர், சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட தலையிற் சிவசின்னமாகிய சடை கண்டஞ்சி உயிர் விட்டவர்.*

**40. நரசிங்கமுனையரைய நாயனார் :** *குறுநிலமன்னர், நடுநாடு-சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர். சிவவேடம் பூண்ட காமக்குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபட்டவர்.*

**41. அதிபத்த நாயனார் :** *நுளையர் (மீன் பிடிப்பவர்) சோழநாடு, நாகப்பட்டினம் - நவரத்தினம் இழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக் கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்தவர்.*

**42. கலிக்கம்ப நாயனார் :** *வணிகர், நடுநாடு பெண்ணாகடம் - தமது பழைய வேலையாள் சிவனடியாராக வந்தபோது தாம் அவரை வழிபட்டு, வழிபடாத தமது மனைவி கையை வெட்டியவர்.*

**43. கலிய நாயனார் :** *செக்கார், தொண்டைநாடு, திருவொற்றியூர் - திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் தமது இரத்தங்கொண்டு எரிக்க முயன்றவர்.*

**44. சக்தி நாயனார் :** *வேளாளர், சோழநாடு, வரிஞ்சியூர் - சிவனடியார்களைக் குறைகூறுபவர்களுடைய நாக்கை அறுத்தவர்.*

**45. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் :** குறுநிலமன்னர், தொண்டைநாடு, காஞ்சிபுரம் - பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து க்ஷேத்திர வெண்பாவால் நிலையாமை கூறியவர்.

**46. கணம்புல்ல நாயனார் :** இருக்குவேளூர்-புல் விற்று, நெய்கொண்டு திருவிளக்கெரித்தவர், நெய்யின்மை யால் தமது தலைமயிரையே எரித்தவர்.

**47. காரி நாயனார் :** சோழநாடு, திருக்கடவூர் - கோவை பாடிப்பொருள் பெற்று ஆலயப்பணி செய்தவர்.

**48. நின்றசீர்நெடுமாற நாயனார் :** அரசர், பாண்டிநாடு, மதுரை - திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி அவர் திருவாக்கால் கூன் நிமிரப்பெற்றுச் சைவரானவர்.

**49. வாயிலார் நாயனார் :** வேளாளர், தொண்டைநாடு, மயிலாப்பூர் - மானசீகமான ஞானபூசை செய்தவர்.

**50. முனையடுவார் நாயனார் :** வேளாளர், சோழநாடு, திருநீடூர்-கூலிக்குப் போர்செய்து அக்கூலி கொண்டு சிவனடியாரை வழிபட்டவர்.

**51. கழற்சிங்க நாயனார் :** குறுநில மன்னர், சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காகத் தமது மனைவியின் மூக்கை ஒரு சிவனடியார் அறுத்த தண்டனை போதாதென்று அவர் கையையும் வெட்டியவர்.

**52. இடங்கழி நாயனார் :** அரசர், கோனாடு, கொடும்பாளூர் - அடியார் வழிபாடு செய்ய நெல் திருடினவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தந்தவர்.

**53. செருத்துணை நாயனார் :** வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர் - கழற்சிங்க நாயனாருடைய மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக அவர் மூக்கை அரிந்தவர்.

**54. புகழ்த்துணை நாயனார் :** ஆதிசைவர், செருவிலிபுத்தூர் - சிவபூசைக்கு உதவியாகப் பஞ்சகாலத்தில் இறைவனால் காசு அளிக்கப்பெற்றவர்.

**55. கோட்புலி நாயனார் :** வேளாளர், சோழநாடு, திருநாட்டியத்தான்குடி - சிங்கடி, வனப்பகை என்ற இரண்டு புதல்வியரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அர்ப்பணம் செய்தவர். சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தார் அனைவரையும் சிசுவுட்படக் கொன்றவர்

**56. பூசலார் நாயனார் :** அந்தணர், தொண்டை நாடு, திருநின்றவூர் - மனத்தினாலேயே கோயில்கட்டிச் சிவவழிபாடு செய்தவர்.

**57. மங்கையர்க்கரசியார் :** (மானியார்) அரசியார், பாண்டியநாடு - திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தமது கணவரையும் நாட்டையும் சைவமாக்கியவர்.

**58. நேச நாயனார் :** *சாலியர், காம்பீலிநகரம். சிவனடியார்கட்கு வஸ்திரதானம் செய்தவர்.*

**59. கோச்செங்கட்சோழ நாயனார் :** *அரசர், சோழநாடு - யானை புகமுடியாத எழுபது சிவாலயங்கள் கட்டியவர், முற்பிறவியிற் சிலந்தியாகச் சிவபூசை செய்தவர்.*

**60. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் :** *பாணர், நடுநாடு, திருஎருக்கத்தம்புலியூர் - திருஞானசம்பந்தருடன் சென்று யாழ்த்தொண்டு புரிந்தவர்.*

**61. சடைய நாயனார் :** *ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று அவருக்குச் சடங்கவி சிவாசாரியார் புதல்வியைத் திருமணம் செய்விக்க முயற்சித்தவர்.*

**62. இசைஞானியார் :** *ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று வளர்த்த பெண்மணியார்.*

**63. சுந்தரமூர்த்தி சுவாமிகள் :** *ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - திருத்தொண்டத்தொகை பாடியவர். இறைவனைத் தூது கொண்டவர். முதலையுண்ட பிள்ளையை வருவித்தவர். பெரிய புராணக் காப்பியத் தலைவர்.*

# உயிரட்டவணை (எ) பூப்பிள்ளை அட்டவணை

*(இந்நூல் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறையாதீன* ***மூன்றாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்*** *அவர்கள் துவிதிய பட்டத்தில் ஞானதேசிகராய் எழுந்தருளியிருந்தபோது தமது சிவபூசைக்குப் பூப்பறித்துக் கொடுத்தலால் பூப்பிள்ளை என்று வழங்கிய தவசுப்பிள்ளையின் வேண்டுகோளுக்கிரங்கி எளிய இனிய உரைநடையில் அருளிச் செய்யப்பட்டது. சைவ சித்தாந்த சாத்திர உணர்ச்சிக்கு அடிப்படையான தெளிந்த அறிவைக் கொடுக்கக் கூடியது.)*

## க. உயிர்

*உயிர்களுக்கு எண்ணிக்கையில்லை; பிறப்புமில்லை; இறப்புமில்லை; சிவனைப்போல அழியாமலிருப்பனவாம். எக்காலமும் ஆணவமலத்துடன் கூடியிருப்பனவாம். எப்படிப் போல வெனில்:- அரிசி தவிட்டுடனும்,செம்பு காளிதத்துடனும்,கடல்நீர் உப்புடனுங் கூடியிருத்தல்போலுமாம். ஆணவமலம் உயிரை மயக்கும்.*

எப்படிப்போலவெனில்:- பயித்திய குணம் உயிரை மயக்குகிறது போலவும், கள் உண்டவனை மயக்குகிறது போலவுமாம். உயிரை ஆணவமலம் மயக்குகிறபடியினாலே உயிருக்கு நல்வினை, தீவினைகளில் ஆசையுண்டு.

அஃதெப்படியெனில்:- பசி சோற்றில் ஆசை உண்டாக்கு கிறதுபோலவும், பிணி மருந்திலே ஆசையுண்டாக்குகிறது போலவும், குருடு கோலிலே ஆசையுண்டாக்குகிறது போலவு மாம்.

உயிருக்கு ஆணவமலங்கொடுத்த ஆசையைச் சிவனறிந்து மலம் நீங்கும்வரை உயிருக்குத் தனு, கரண, புவன, போகங்களை இடை விடாமல் மாற்றி மாற்றிக் கொடுத்துக் கொண்டே யிருப்பன்.

அஃதெப்படிப் போலவெனில்:- வியாதியினால் மருந்தில் ஆசைப்பட்டவனுக்குப் பண்டிதன் அறிந்து வியாதி தீரும்வரை மருந்தைக் கொடுகிறது போலவென்றறிக. இவை உயிர்களுக் கெல்லாம் அனாதியிலுள்ள செய்திகளாம்.

உயிர்களுக்கு இச்சையும், அறிவும், தொழிலும் எந்தக் காலத்திலும் இடைவிடாமல் இருப்பனவாகும். ஆணவ மலத்துடனே மாத்திரம் கூடியிருக்கிற உயிர்களுக்கெல்லாம் **விஞ்ஞானகலரென்று** பெயர். ஆணவ மலத்துடனேயுங் கன்ம மலத்துடனேயுங் கூடியிருக்கிற உயிர்களுக்கு எல்லாம் **பிரளயகலரென்று** பெயர். ஆணவமலத்துடனேயுங் கன்ம மலத்துடனேயும், மாயாமலத்துட னேயுங் கூடியிருக்கிற உயிர்களுக்கெல்லாஞ் **சகலரென்று** பெயர். ஆக உயிர் வகை மூன்று.

## உ. ஆணவம்

மும்மலங்களுள் ஆணவமலம் ஒன்றாயிருந்து எல்லா உயிர்களையும் மயக்கும். நல்ல நினைவுகளை மறப்பிக்கும்; பொல்லா நினைவுகளை நினைப்பிக்கும். நல்ல சொற்களைச் சொல்ல வொட்டாது; பொல்லாத சொற்களைச் சொல்லச் செய்யும். நல்ல தொழில்களைச் செய்யவொட்டாது; பொல்லாத தொழில்களைச் செய்வித்துக்கொண்டே யிருக்கும். உயிருக்கு ஊதியமாயுள்ள காரியங்களை ஒருகாலத்துஞ் செய்யவொட்டாது; உயிருக்குக் கேடுவருகிற காரியங்களை எந்தக் காலமும் இடைவிடாமற் செய்வித்துக் கொண்டேயிருக்கும். உயிரினுடைய நல்லறிவை எந்தக் காலமும் இடைவிடாமற் கெடுத்துக் கொண்டேயிருக்கும்; உயிருக்குப் பொல்லாத அறிவை எந்தக் காலமும் இடைவிடாமற் கொடுத்துக்கொண்டேயிருக்கும்.

## ௫. கன்மம்

அது நல்வினை, தீவினையென இருவகைப்படும். அவை மனதினாற் செய்யப்படுவனவும், வாக்கினாற் செய்யப்படு வனவும், சரீரத்தினாற் செய்யப்படுவனவும் என ஒவ்வொன்றும் மூவகைப்படும். இன்னும் அவை உயிர் சம்பந்தமாயும் சிவசம்பந்தமாயும் செய்யப் படுவதாற் பலவகைப்படும் இவையெல்லாம் புத்தி பூர்வமாகவும், அபுத்திபூர்வமாகவும் நிகழும்.

நல்வினையெல்லாம் பசுபுண்ணியம் சிவபுண்ணியமென இரண்டனுள் அடங்கும். தீவினையெல்லாம் பசுத்துரோகம், சிவத்துரோகம் என இரண்டனுள் அடங்கும். இனிப் புண்ணியங் களுக்குப் பலன் இன்பமே வரும் பாவங்களுக்குப் பலன் துன்பமே வரும்.

வினைகளுக்கெல்லாந் தூலகன்மமென்று பெயர். இந்த வினைகளுக்குப் பின்பு பலன் கொடுப்பதாய் ஏற்படும் புண்ணிய பாவங்களுக்குச் சூக்குமகன்மமென்று பெயர். இந்தப் புண்ணிய பாவங்களின் பலனாக வருகிற இன்ப துன்பங்களுக்கு அதிசூக்கு மகன்ம மென்று பெயர். இருவினைக்கு ஆகாமியமென்று பெயர். இருவினைப் பலனாகிய புண்ணிய பாவங்களுக்குச் சஞ்சித மென்று பெயர். புண்ணிய பாவங்களுக்குப் பலனாகிய இன்ப துன்பங் களுக்குப் பிராரத்துவம் என்று பெயர்.

பயிரிடுகிறதுபோல இருவினைகள். அப்பயிர்ப் பலனைக் களஞ்சியத்திலே கட்டி வைக்கிறதுபோல புண்ணியபாவங்கள்; கட்டி வைத்ததிற் சிறிதுசிறிதெடுத்து உண்பதுபோல இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது. இன்ப துன்பங்கள் தெய்வீகத்தினாலேயும் வரும்; பஞ்சபூதங்களினாலேயும் வரும்; பிற உயிர்களினாலேயும் வரும். தான் இச்சைப்பட்டு வருகிறதும் உண்டு. தான் இச்சைப்படாமல் வருகிறதும் உண்டு. இச்சையின்படிக்கு வராமல் வேறொன்று வருகிறதும் உண்டு.

## ௬. சுத்தமாயை

சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆக 5-சிவதத்துவமும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக 4 - வாக்குகளும், 51-அட்சரங்களும், 81-பதங்களும், 7-கோடி மகா மந்திரங்களும், 28-மூலாகமங்களும், 270-உபாகமங்களும், 4-வேதங்களும், பதினெண் புராணங்களும், 6-சாத்திரங்களும், 64-கலைக்கியானங்களும், சிவபேதங்களுக்கும், சத்திபேதங்

களுக்கும், நாதபேதங்களுக்கும், விந்து பேதங்களுக்கும், உருத்திர பேதங்களுக்கும், விஞ்ஞான கலர்களுக்கும், பிரளயாகலர் களுக்கும், சரியை, கிரியை யோகம் அனுட்டித்துப் பதவியடைந் தோர்களுக்குந் தனு கரண புவன போகங்களும், நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்னும் பஞ்சகலைகளும் இப்படிப்போல இன்னம் அனந்தங் காரியங்களுஞ் சுத்தமாயையிலிருந்தே பிறக்கும்.

அஃதெப்படிப்போலவெனில்:- ஒரு பொற்கட்டியிலே பல பல ஆபரணங்கள் பிறக்கிறதுபோலவும், ஓர் இருப்புக் கட்டியில் பல பல ஆயுதங்கள் பிறக்கிறதுபோலவும், ஒரு மண்ணிலே பல பல பாண்டங்கள் பிறக்கிறதுபோலவும் எனவறிக.

### ௫. அசுத்தமாயை

காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்னும் வித்தியாதத்துவம் ஏழும், பிரமாக்களுக்கும், விஷ்ணுக் களுக்கும், தெய்வேந்திரர்களுக்கும், இருடிகளுக்கும், நவக்கிரகங் களுக்கும் மற்றுமுள்ள சகலர்களுக்குந் தனு கரண புவன போகங்களும், இப்படிப்போல இன்னம் அனந்தங் காரியங்களும், அசுத்த மாயையிலேயிருந்து பிறக்கும்.

அஃதெப்படிப்போலவெனில்:- ஒரு விதையிலே பல கொம்புகளும், பல குழைகளும், பல பூக்களும், பல காய்களும், பல கனிகளும் பிறக்கிறது போலவும், ஒரு சந்தனமரத்திலே பல பல சந்தன சேறு பிறக்கிறதுபோலவும், ஒரு நெல்விதையிலே பல நெல்லுகள் பிறக்கிறது போலவும், ஒரு மேகத்திலே பல பிரிவுகளும், பல சத்தங்களும், பல மின்களும், பல பல இந்திரதனுசுக்களும் பிறக்கிறதுபோலவு மெனவறிக.

### சா. பரமசிவன்

அருவமுமல்லன், உருவமுமல்லன், உருவஅருவமும் அல்லன். அவனுக்கு மூன்று குணத்திலே ஒரு குணமுமில்லை. ஒன்பது நிறத்திலே ஒரு நிறமுமில்லை. நாலு மலத்திலே ஒரு மலமுமில்லை. உடம்புக்குள் உயிரிருக்கிறது போல உயிர்க் குள்ளே உயிராயிருப்பன். போக்குமில்லை, வரத்துமில்லை, பிரிக்கப்படான். இன்பமா யிருப்பன். நம்பின பேர்களுக்கு மோட்சங் கொடுக்கிறவன். மற்றவர் களுக்கு அவரவர் செய்த இருவினைப் பயன்களைக் கொடுக்கிறவன், எல்லா உயிர்களுக்கும் பெரியவன். எல்லா உயிர்களுக்குஞ் சிறியவன்.

சகலத்தையும் அறிகிறவன். சகல தொழில்களையுஞ் செய்கிறவன். சகல ஆன்மாக்களுக்கும் அவரவர் விரும்பினதை எல்லாங் கொடுக்கிறவன். எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறவன். இன்னும் இவை போன்ற பல இலக்கணங்களையுடையவன். இவனைக் கருதினும் ஒருவருங் காணமாட்டார்கள்; ஆனபடியினாலே, உயிர்கள் கண்டு பூசை பண்ணும்படிக்குப் பல பல உருவங்களை எடுத்துக் கொண்டு, பூசை முதலாகிய பணிவிடையுங் கொண்டருளிப் பணிவிடைக்குத் தக்க பலன்களையுங் கொடுப்பன். சிவனுக்கு இச்சையும் அறிவுந் தொழிலும், எந்தக் காலமும் இடைவிடாமல் இருக்கும்.

பரமசிவம், பராசக்தி; நாதம், விந்துச்சத்தி; சதாசிவம், மனோன்மனிச்சத்தி; மகேசுவரன், மகேசுவரச்சத்தி, உருத்திரன், உமாசத்தி; விஷ்ணு, இலட்சுமிசத்தி; பிரமா; சரச்சுவதிசத்தி; ஆக சிவபேதம் 7. சத்திபேதம் 7.

## எ. தனு

முட்டைப்பிறப்பு, வேர்வைப்பிறப்பு, விதைப்பிறப்பு, தோற்பைப்பிறப்பு, ஆக 4. இந்த நாலு பிறப்பிலே யிருந்தும் விரிந்த பிறப்புக்கு வகை மரப்பிறப்பு, ஊர்வனப் பிறப்பு, தெய்வப்பிறப்பு, நீர்வாழ் பிறப்பு, பறவைப் பிறப்பு, நாற்காற் பிறப்பு, மனுடப்பிறப்பு, ஆக ஏழு. எழுவகைப் பிறப்பிலே யிருந்து விரிந்த பிறப்பிற்கு வகை மரப் பிறப்புப்பேதம் 19-இலட்சம், ஊர்வனப் பிறப்புப்பேதம் 15-இலட்சம், தெய்வப்பிறப்புப் பேதம் 11-இலட்சம், நீர்பிறப்புப் பேதம் 10-இலட்சம், பறவைப்பிறப்புப் பேதம் 10-இலட்சம், நாற்காற் பிறப்புப் பேதம் 10-இலட்சம், மனுடப்பிறப்புப் பேதம் 9-இலட்சம் ஆகப் பிறப்புப்பேதம் 84-இலட்சம்.

அந்த 84-இலட்சம் பிறப்பிலே யிருந்தும் இன்னும் பிறப்புக்கள் பலவாய் விரியும்.

ஒரு தேக்கு மரத்திலே பேதப்பிறப்பு வருகிற வகை: சந்தனத்தேக்கு, கற்றேக்கு, சுரைத்தேக்கு, தவிட்டுத்தேக்கு, நாய்த்தேக்கு, நரித்தேக்கு, பெரிய தேக்கு, சிறிய தேக்கு, என்றிருத்தல்போல அனந்தம் பிறப்புப் பேதமுண்டு. 84-இலட்சம் பிறப்பிற்கும் இதுபோல என்று அறிக.

### அ. கரணம்

*பூதம் 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் சத்தாதி விடையம் 5, அந்தக்கரணம் 4, ஆன்ம தத்துவம் 24; வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் ஆகத் தத்துவம் 36; பிருதிவியின் கூறு 5, அப்புவின் கூறு 5, தேயுவின் கூறு 5, வாயுவின் கூறு 5, ஆகாயத்தின் கூறு 5, ஆக 25; வாயு 10, நாடி 10, வசனாதி 5, வாக்கு 4; குணம் 3; அகங்காரம் 3 ஆகப் புறக்கருவி 60 ஆகத் தத்துவம் 96. மாற்சரியம் 1, அர்த்த வேடணை தாரவேடணை, புத்திர வேடணை, ஆக வேடணை 3, இதில் உலோக வேடணையைக் கூட்டி, தார வேடணையை நீக்கி மூன்றாகக் கூறுவதும் உண்டு.*

### கூ. புவனம்

*பலமுழங் கூடினதொரு வீடு. பலவீடு கூடினதொரு தெரு, பலதெருக் கூடினதோர் ஊர், பல ஊர் கூடினதொரு நாடு, பலநாடு கூடினதோர் ஊர், பல ஊர் கூடியதொரு நாடு, பலநாடு கூடின தொரு தேசம், பலதேசங் கூடின தொரு கண்டம், பலகண்டங் கூடினதோர் உலகம், பல உலகங் கூடினதோர் அண்டம், அண்டங்களுக்கு இவ்வளவென்று மட்டுச் சொல்லப்படாது.*

*அஃதெப்படிப் போலவெனில் கடுகு, கீரைவிதை, எள்ளு, அத்திக்காய்க்குள்ளேயிருக்கிற விதை, தினை முதலியவைகளுக் கெல்லாம் பிரமாணந் தெரியும். ஆனால் எண்ணித் தொகை பண்ண முடியாது. இப்படிப்போல அண்டங்களுக்குப் பிரமாணந் தெரியும். அண்டங்களை எண்ணித் தொகைபண்ண முடியாது.*

### க0. போகம்

*உயிர்களுக்கு இரத்தினம், சொர்னம், சந்தனம், பெண், மாலை முதலான பதார்த்தங்களிலே விருப்பமாகவே இருக்கும். புலி, பாம்பு, தேள், நட்டுவக்காலி, வியாதி முதலான பதார்த்தங்களிலே வெறுப்பாகவே இருக்கும். ஆக இந்த இரண்டு வகைப் பதார்த்தங் களுக்கும் இவ்வளவென்று எண்ணித் தொகை இல்லை.*

*தொகை யில்லாது போனாலுஞ் சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆக இந்த ஐந்தினிடமாக நின்று அடங்கியிருக்கும். இனிச் சத்தமென்றது விருப்புச்சத்தம், வெறுப்புச்சத்தம் என்று இரண்டு வகைப்படும்; இப்படி மற்ற நாலுக்கும் எட்டுவகையாகக் கண்டுகொள்க. ஆக 10 வகையில் ஒவ்வொன்றும் அளவிறந்ததாக வரும். இப்படி அளவிறந்ததாக வந்தாலும் இன்பதுன்பமாய் வருவதன்றி வேறு விதமாய் எந்தச் சனனத்திலும் வராது.*

## கக • சிவபுண்ணியம்

*புத்திபூர்வம், அபுத்திபூர்வம், உபாயச்சரியை, உபாயக் கிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் என 10. இவைகளில் ஏனைய வற்றை இவனாகச் செய்து முடித்த பின்பு பரமசிவன் ஞானாசாரிய னாக எழுந்தருளி உண்மை ஞானமென்கிற சிவபுண்ணியத்தைக் கொடுப்பர்.*

*அந்த ஞானம் பத்து விதமாக இருக்கும். அவையாவன: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்ம ரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என 10. இதிலொன்பதும் உயிர் கண்டு கழிப்பன, சிவபோகமொன்றை மாத்திரமே எக்காலமும்உண்டு கொண்டிருப்பன. இச்சிவ போகத்தை முத்தான்மா ஒரு காலுந் தள்ளமாட்டாது. இதின்மேல் உயிருக்கு ஊதியம் ஒன்றுமில்லை.*

மெய்கண்டதேவன் திருவடி வாழ்க.

*திருச்சிற்றம்பலம்*

**சிவபுண்ணியங்கள்**

1. விபூதி தரித்துக் கொள்ளலும், பிறர்க்கு வழங்கலும்.
2. உருத்திராஷந் தரித்துக் கொள்ளலும், தக்கோர்க்கு வழங்கலும்.
3. சிவாலயங்களில் அலகிடுதலும், மெழுக்கிடுதலும்.
4. திருநந்தனவனம் அமைத்து புஷ்பப்பணி செய்தல்.
5. சிவாலயங்களில் திருவிளக்கிடுதல், தூபமிடுதல்.
6. சிவபூஜை செய்தலும், செய்வோர்க்கு உதவுதலும்.
7. சிவாலயங்களில் கீதம் இசைத்தல்.
8. சிவாலயம் எடுத்தல், பழைய ஆலயம் புதுக்குதல்.
9. சிவாலய தரிசனம் செய்தல்.
10. குருபூஜை கொண்டாடுதல்.
11. குருவழிபாடு செய்தல்.
12. சிவவிரதங்கள் மேற்கொள்ளல்.
13. சிவதீக்ஷை ஏற்றுக் கொள்ளல், தக்கவரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
14. நாற்பாதங்களில் நின்று ஒழுகல்.
15. வேத சிவாகம - திருமுறைகள் - சாத்திரங்களைப் படிப்பித்தல்